உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்















## தைப்பூச திருவிழா

# ஆறுபடையப்பன் சிறப்பிதழ்

விருப்ப சந்தா
செலுத்த

aanmeegamalar.com

குருவே சரணம்



ஓம் ஸ்ரீ சனீஸ்வரர் பகவான் துணை

சாது தரிசனம்...!

பாவ விமோசனம்...!



அனைவரும் வருக...!

குருவருள் பெறுக...!

14 ஆம் ஆண்டு

வருகின்ற 14.02.2024
புதன்கிழமை
மாசிமாதம் 2ஆம் தேதி
காலை 10.00
மணிக்கு

# சித்தர் பெருமக்களின்

## குருபூஜை மற்றும்
## அன்னதான விழா அழைப்பிதழ்

**கர்மயோகி பகவான் ஸ்ரீ குருதாத்தா சுவாமிகள்**

எண்:160, 3 - வது தெரு, B.V. காலனி
வியாசர்பாடி, சென்னை - 39.
93619 17913   80159 21657   guruthatha16@gmail.com

aanmeegamalar.com

# முருகனுக்கு மட்டுமல்ல விநாயகருக்கும் ஆறுபடை வீடு உள்ளது




ஆறுபடைவீட்டைக் கொண்டவர் முருகன் மட்டுமல்ல, விநாயகருக்கும் ஆறுபடை வீடு உள்ளது. ஒவ்வொரு படை வீட்டுக்கும் ஒவ்வொரு சிறப்பு உள்ளது. இந்த ஆறுபடை வீட்டு விநாயகரும், அவரை வழிபட்டால் கிடைக்கும் பலனையும் பார்ப்போம்.

## முதல்படை வீடு: திருவண்ணாமலை

திருவண்ணாமலையில் எழுந்தருளியுள்ள விநாயகரின் பெயர் 'அல்லல் போம் விநாயகர்'. இந்த விநாயகரைக் குறித்து போற்றப்படும் பாடலே 'அல்லல் போம் வல்வினை போம், அன்னை வயிற்றில் பிறந்த தொல்லை போம்' என்பது. இவரை வழிபட அல்லல்கள் தீரும்.

## இரண்டாம் படை வீடு: விருத்தாசலம்

இங்குள்ள ஆலயத்தில் எழுந்தளியுள்ள கணபதிக்கு ஆழத்துப் பிள்ளையார் என்று பெயர். பெயருக்கேற்ப ஆழத்தில் சன்னதி கொண்டுள்ளார். இந்த விநாயகரைத் துதித்தால் செல்வமும், கல்வியும் மற்றும் சீரான வாழ்வும் நம்மை வந்து சேரும்.

## மூன்றாவது படைவீடு: திருக்கடவூர்

திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோயிலில் "கள்ள வாரண பிள்ளையார்' அருள்பாலிக்கிறார்.

பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தபின், முதன் முதல் கடவுளான விநாயகரை வழிபடவேண்டும் என்பதை மறந்த காரணத்தால், அமிர்த குடத்தை எடுத்து இத்தலத்தில் ஒளித்து வைத்தார், இதனால் இவரை "கள்ள வாரண பிள்ளையார்' எனப்படுகிறார்.

எந்தவிதமான வாழ்க்கை வசதிகள் நமக்கு அமையப் பெற்றிருந்தாலும் அதை அடைய நமக்கு மிக முக்கியத்தேவை நீண்ட ஆயுள். இந்த ஆயுளை அள்ளி வழங்குகிற வராக திருக்கடவூர் கள்ள வாரணப் பிள்ளையார் விளங்குகிறார்.

## நான்காம்படை வீடு: மதுரை

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள சித்தி விநாயகர் நான்காம்படை வீடு விநாயகராக கருதப்படுகிறார். மீனாட்சி அம்மன் சன்னதிக்குள் நுழையும் முன்னர் இவரின் தரிசனத்தைப் பெறலாம். நாம் விரும்புகின்றவாறு காரியங்களை நிறைவேற்றித்தருபவராக இவர் உள்ளார். மாணிக்கவாசகர் பாண்டிய மன்னருக்காக குதிரை வாங்கப் புறப்படுகையில் இந்த சித்தி விநாயகரையே தரிசித்துச் சென்றதாக திருவிளையாடல் புராணம் தெரிவிக்கிறது.

## ஐந்தாவது படை வீடு: பிள்ளையார்பட்டி

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் ஐந்தாம் படைவீட்டின் அதிபதியராகத் திகழ்கிறார். அனைத்துப் பேறுகளும் நம்மை வந்தடைந்தாலும் ஞானம் இல்லையேல் அந்தப் பேறுகளால் ஒரு பலனும் இல்லை. அந்த ஞானத்தை வழங்குபவராகஇவர் அருள்பாலிக்கிறார். இவர் சிவலிங்கத்தைக் கையில் தாங்கி அருள்புரிகிறார். சிவலிங்கத்தை கையில் ஏந்தி சிவபூஜை செய்பவராகத் திகழும் இந்த கற்பக விநாயகரை வணங்கினால் தீட்சையும் ஞானமும் கிடைக்கும்.

## ஆறாம்படை வீடு: திருநாரையூர்

திருநாரையூரில் அருள்பாலிக்கிறார் பொள்ளாப் பிள்ளையார். அப்பரும் சம்பந்தரும் பாடிய இத்தலத்தில் இவரை வழிபட புதிய முயற்சிகளில் கை மேல் வெற்றி பலன் கிடைக்கும்.

aanmeegamalar.com

# பரிகாரம் தேடிய முருகன் தவமிருந்த இடம்: திருப்பரங்குன்றம்



கயிலாயத்தில் சிவபெருமான், பார்வதி தேவிக்கு ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசிக்கும் போது, தன் தாயாரின் மடிமீது முருகப் பெருமான் அமர்ந்திருந்தார்.

தாய்க்குத் தந்தையார்,பிரணவ மந்திர உபதேசம் செய்த போது முருகப்பெருமானும் அவ்வுபதேசத்தைக் கேட்டார். புனிதமான மந்திரப் பொருளை குருவின் மூலமாகவே அறிந்து கொள்ள வேண்டும். மறைமுகமாக அறிந்து கொள்ளுதல் முறைமையாகாது. அது பாவம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

இக்குற்றத்திற்குப் பரிகாரம் தேடி முருகப் பெருமான் திருப்பரங்குன்றத்திற்கு வந்து தவம் செய்தார். இந்நிலையில், சிவபெருமானும், பார்வதி தேவியாரும் தோன்றி, முருகப் பெருமானுக்கு அங்கு காட்சி தந்து தவத்தைப் பாராட்டினார்கள்.

சிவபெருமான் பார்வதி தேவி இங்கு பரங்கிநாதர் என்றும், ஆவுடை நாயகி என்றும் பெயர் பெற்றார்கள். இவர்கள் காட்சியளித்த திருப்பரங்குன்றத்தில் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் இருக்கிறது. எனவே திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் முதலில் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்திற்குச் சென்று வழிபடுதல் நல்லது என்பது ஐதீகமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

முருகப்பெருமானுக்கு, சிவபெருமான் தை மாதத்தில் பூச நட்சத்திரத்தன்று காட்சி தந்தார். எனவே தைப்பூசத்தன்று, சிவபெருமானையும், முருகக் கடவுளையும் வழிபடுகின்றவர்கள் இஷ்ட சித்திகளைப் பெறுவார்கள் என்று கூறப்படுகிறது. எனவே, திருப்பரங்குன்றத்தில் தைப்பூச விழா, பத்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

முருகப்பெருமான் அவதாரம் செய்ததன் நோக்கமே, சூரபத்மனையும், அவனது சேனைகளையும் அழித்து தேவர்களைக் காப்பதேயாகும்.

அவ்வண்ணமே முருகப்பெருமான் அவதாரம் செய்து, சூரபத்மனை அழித்து, அவனை மயிலும் சேவலுமாக்கி, மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டருளினார். இதனால் மகிழ்ச்சியடைந்த தேவர்கள், துயர் களையப் பெற்றார்கள். அதனால் முருகப்பெருமானுக்குத் தன்னுடைய நன்றியைச் செலுத்தும் வகையில், இந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை, திருமணம் செய்து கொடுக்க விரும்பினான்.

இதன்படி முருகன் தெய்வயானை திருமணம் இந்த திருப்பரங்குன்றத்தில் நடந்தது.

திருமண விழாவில் பிரம்மா, விவாக காரியங்கள் நிகழ்த்த, சூரிய, சந்திரர்கள் ரத்ன தீபங்கள் தாங்கி நிற்க, பார்வதி பரமேஸ்வரர் பரமானந்தம் எய்தி நிற்க, இந்திரன் தெய்வயானையைத் தாரை வார்த்து கொடுக்க, முருகப்பெருமான், தெய்வயானையைத் திருமணம் செய்து கொண்டதாகத் திருப்பரங்குன்றப் புராணம்கூறு கிறது.

தொன்று தொட்டு இக் கோவிலில் சூரசம்காரத் தில் ஈடுபட்ட வீரவாகு வழித் தோன்றல்கள் என்று அறியப்படும் செங்குந்த முதலியார் மரபை சேர்ந்தவர்கள் இங்கு சுவாமியை சுமந்து செல்லும் சீர்பாத சேவையை செய்து வருகின்றனர்.




அகநானூற்றில் இந்த மலை முருகன் குன்றம் என்று அழைக்கப்படுகிறது. மேலும் திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, மதுரைக் காஞ்சி, பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இத்திருத்தலத்திற்கு இலக்கியங்களில் தண்பரங்குன்று, தென்பரங்குன்று, பரங்குன்று, பரங்கிரி, திருப்பரங்கிரி பரமசினம், சத்தியகிரி, கந்தமாதனம், கந்த மலை என பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன.

முருகப் பெருமானின் அறுபடை வீட்டு கோயில்களில், இக்கோயில் அளவில் பெரியதாகும்.

லிங்க வடிவில் இருக்கும் இம்மலையைப் பற்றி சைவ சமயக் குரவர்களில் சுந்தரமூர்த்தி நாயனார், திருஞான சம்பந்தப் பெருமான் ஆகியோர் இவ்வூருக்கு வந்து ஆலய வழிபாடு செய்து பதிகங்கள் பல பாடியுள்ளனர்.

சங்ககாலப் புலவரான நக்கீரர் இத்தலத்து முருகப் பெருமானை வழிபட்டு தனது குறை நீக்கிக் கொண்ட திருத்தலம். தெரியாமல் செய்யும் தவறுகளை போக்கும் இறைவனாக இத்தல முருகன் விளங்குகிறார்.

# DO YOU KNOW

**All Our Food Outlets Serve Simple & Soulful Foods**
**All Our Foods Are Prepared Like Homemade**
**All Sauces | Dressings | Spice Mixes | Are Prepared In-house**

| | |
|---|---|
| **Why 100% In-house Preparation?** | **TO ENSURE**<br>Zero Chemical Preservatives \| Zero Chemical Colours \|<br>Zero Chemical Flavours \| Zero Artificial Taste Enhancing Substances |
| **About ONDRAHA Offers?** | **CELEBRATION CAKE OFFER**<br>Enjoy Our COURTYARD and MEZZMAZE Along With Your Guests<br>FREE |
| | **PERSONALISED GIFTING SERVICES**<br>Enjoy Our Personalised Packing Services and Delivery Across India<br>FREE |
| | **SCHOOL CHILDREN EXPERIENCE PROGRAMS**<br>Exciting & Memorable Experiences, Exclusively for School Children - through School Management |

## We are Responsible. Visit us for Safe Food.

akkarai Responsible Snacking

akkarai Responsible Snacking — akkarai express

LET'S THINNAI Relax & Recharge

THINNAI's BUNLY BUNK Steamed Bun with Filling

The ICECREAM VAN Homely IceCream Estd. 2018

ONDRAHA Wholesome Selling

CHOCO KICK Cafe — Hit Pause! Get together!

Check out for locations & timings: www.indianfoods.in | Contact: Ms Rani | 9791900447 | div3_ifpl@yahoo.co.in

INDIANFOODS INNOVATIONS — Simple & Soulful

MD COMMUNITY KITCHEN — Simple & Soulful

aanmeegamalar.com

# வாழ்க்கையிலும் தொழிலிலும் வெற்றியை தரும்: திருச்செந்தூர் முருகன்



2 ஆம் படை வீடு

முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் திருச்செந்தூர்மட்டும் கடற்கரையிலும், பிற ஐந்தும் மலைக்கோயிலாக அமைந்துள் ளது.

157 அடி உயரம் கொண்ட இக் கோயிலின் கோபுரம், ஒன்பது தளங்களைக் கொண்ட தாக அமைந்துள்ளது. முருகப்பெருமான் சூரனை ஆட்கொண்ட பின்பு, தனது வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகச் சிவபூஜை செய்தார். இந்த கோலத்திலேயே முருகன் வலக்கையில் தாமரை மலருடன் அருளுகிறார்.

தலையில் சிவயோகி போல ஜடாமகுடமும் தரித்திருக்கிறார். இவருக்கு இடது பின்புற சுவரில் ஓர் இலிங்கம் இருக்கிறது. இவருக்கு முதல் தீபாராதனை காட்டிய பின்பே, முருகனுக்குத் தீபராதனை நடக்கும். சண்முகர் சன்னதியிலும் சுவாமிக்குப் பின்புறம் இலிங்கம் இருக்கிறது. இவ்விரு இலிங்கங்களும் இருளில் உள்ளதால், தீபாராதனை ஒளியில் மட்டுமே காண முடியும்.

தேவர்கள், தங்களுக்கு இன்னல் செய்த, சூரபத்மனை அழிக்கும்படி சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களது வேண்டுதலை ஏற்ற சிவன், தன் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு பொறிகளை உண்டாக்கினார். அதிலிருந்து முருகப்பெருமான் தோன்றினார்.

பின், சிவபெருமானின் கட்டளையை ஏற்று, சூரபத்மனை அழிக்க இங்கு வந்தார். இவ்வேளையில் முருகப்பெருமானின் தரிசனம் வேண்டி, தேவர்களின் குருவான வியாழபகவான் இத்தலத்தில் தவமிருந்தார். அவருக்குக் காட்சி தந்த முருகப்பெருமான், இவ்விடத்தில் தங்கினார். அவர் மூலமாக அசுரர்களின் வரலாறையும் தெரிந்து கொண்டார். அப்போது தனது படைத்தளபதியான வீரபாகுவை, சூரபத்மனிடம் தூது அனுப்பினார். அவன் கேட்கவில்லை. பின்பு, முருகன் தன் படைகளுடன் சென்று, அவனை வதம் செய்தார். வியாழ பகவான், முருகனிடம் தனக்குக் காட்சி தந்த இவ்விடத்தில் எழுந்தருளும்படி வேண்டிக்கொண்டார். அதன்படியே முருகனும் இங்கே தங்கினார். பின்பு, வியாழபகவான் விஸ்வகர்மாவை அழைத்து, இங்குக் கோயில் எழுப்பினார். முருகன், சூரனை வெற்றி பெற்று ஆட்கொண்டதால் இவர், "ஜெயந்திநாதர்"என அழைக்கப்பெற்றார். பிற்காலத்தில் இப்பெயரே "செந்தில்நாதர்' என மருவியது. தலமும் "திருஜெயந்திபுரம்' (ஜெயந்தி வெற்றி) என அழைக்கப்பெற்று, "திருச்செந்தூர்' என மருவியது.

இத்தல முருகன் சன்னதிக்கு வலப்புறத்தில் "பஞ்சலிங்க' சன்னதியும் இருக்கிறது. இவர்களை மார்கழி மாதத்தில் தேவர்கள் தரிசிக்க வருவதாக ஐதீகம். சிவனுக்குரிய வாகனமான நந்தியும், முருகனுக்கு எதிரே இந்திர, தேவ மயில்களும் மூலஸ்தானம் எதிரே உள்ளன.

வெளியிலிருந்தபடிமுருகரைத் தரிசனம் செய்யும்போதே பஞ்சலிங்க தரிசனம் செய்ய இயலாது. மூலவர் முருகரின் இடப்புறம் உள்ள சிறு வாயில் வழியே உள்ளே நுழைந்து சுற்றிவலப்புறம் வந்து பாதாள பஞ்சலிங்க தரிசனம் செய்ய வாரநாட்களில் இயலும்.இதற்குக் கோயில் சார்பில் ஐந்து ரூபாய் கட்டண நுழைவுச்சீட்டு உண்டு. கூட்டநெரிசல் அதிகம் உள்ள சமயம் இந்த நுழைவுச்சீட்டு வழங்கப்படுவதில்லை.

திருச்செந்தூரில் முருகன் சன்னதியின் மேற்கு திசையில் இராஜகோபுரம் இருக்கிறது. முருகப்பெருமான் இத்தலத்தில் கடலைப் பார்த்தபடி, கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். பிரதான கோபுரம் சுவாமிக்கு எதிரே, அதாவது கிழக்கு திசையில்தான் அமைத்திருக்க வேண்டும். ஆனால், அப்பகுதியில் கடல் இருப்பதால் மேற்கில் கோபுரம் கட்டப்பட்டுள்ளது. முருகன் மூலஸ்தானத்தின் பீடத்தைவிட, இக்கோபுர வாசல் உயரமாக இருப்பதால், எப்போதும் அடைக்கப்பட்டே இருக்கிறது. கந்த சஷ்டி விழாவில் முருகன் திருக்கல்யாணத்தின்போது நள்ளிரவில் ஒரு நாள் மட்டும் இந்த வாசல் திறக்கப்படும். அவ்வேளையில் பக்தர்கள் உள்ளே செல்ல அனுமதிகிடையாது. இக்கடற்கரைக் கோவிலுக்குச் செல்லும்பாதையின் தொடக்கத்தில் சுமார் மூன்று பர்லாங்கிற்கு முன்தூண்டுகை விநாயகர் கோவில் உள்ளது. இது சுப்பிரமணியசுவாமி கோயிலின் உபகோவிலாகும். முருகன் இருக்கும் இடத்தைப் பக்தர்களுக்குத் தூண்டிக் காண்பிக்கும் விதமாக விநாயகர் இருப்பதால் இப்பெயர் பெற்றது.

aanmeegamalar.com






தைப்பூச திருவிழாவிற்கு வருகை தரும்
பக்தர்களை வரவேற்கிறோம்



# ஸ்ரீ பேச்சி அம்மன்

## டிரான்ஸ் போர்ட் & டிரேடர்ஸ்
## சேம்பர் பிரிக்ஸ் & ரியல் எஸ்டேட்

எங்களிடம் உயர்தரமான
அளவில் பெரிய சேம்பர்
செங்கல் கிடைக்கும்
பொறியாளர்கள் பில்டிங்
ஒப்பந்ததாரர்கள் அணுகவும்







உரிமையாளர் எம்.கந்தசாமி
செல் 9843789337 9487059737

அலுவலக முகவரி

பிளாட் 1&2 செல்வபுரம் மெயின்ரோடு, குகன் பள்ளி
அருகில், தெப்பக்குளம், மதுரை–626009

சேம்பர் முகவரி

கிருங்கா கோட்டை முத்தனேந்தல் அருகில்
மதுரை–ராமேஸ்வரம் பை–பாஸ் ரோடு மானாமதுரை

aanmeegamalar.com

# இரண்டு கோவிலை தரிசித்தால் முழுபலனை தரும்: பழனி முருகன்

ஒருநாள் நாரதர் மிக அரிதாகக் கிடைக்கும் ஞானப்பழத்தை பரமசிவனுக்கு படைப்பதற்காகக் கொண்டு வந்தார். அப்பொழுது அருகிலிருந்த உமையாள் அந்தப் பழத்தை தனது குமாரர்களான குமரனுக்கும், விநாயகனுக்கும் பகிர்ந்து கொடுக்க விரும்பினாள்.

ஆனால் பரமசிவனோ பழத்தைப் பகிர்ந்தால் அதன் தனித்தன்மை போய்விடும் எனக்கூறி தனது மைந்தர்கள் இருவருக்கும்ஒரு போட்டியை அறிவித்தார்அதில் உலகத்தை யார் முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்கு அந்த ஞானப்பழத்தைப் பரிசாக அறிவித்தார்.

குமரனோ தனது மயில் வாகனத்தில் ஏறி உலகத்தைச்சுற்றி வந்தார். விநாயகனோ தனது பெற்றோரை உலகமாகக் கருதி அவர்களைச் சுற்றிவந்து ஞானப் பழத்தை வென்றார்.

இதனால் ஏமாற்றமடைந்த குமரன் அனைத்தையும் துறந்து பழனிமலையில் குடியேறினார். அன்றிலிருந்து அவரது நின்ற இடம் "பழம் நீ" (பழனி) என அழைக்கப்படுகிறது.

பழனிமலை அங்கே வருவதற்கு உதவியவர் இடும்பன். அவர் பெரிய தராசின் மூலம் பழனிமலையையும் இடும்பமலையையும் தூக்கிக் கொண்டு வந்து வைத்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.




புராணங்களில் இப்படியான பெயர்க் காரணங்கள் வழங்கப்பட்டாலும் பழனம் என்றபழந் தமிழ்ச் சொல்லின் அடிப்படையில் உருவான பெயரே பழனி. பழனம் என்ற சொல் விளைச்சலைத் தருகின்ற நிலத்தைக் குறிக்கும். அப்படிப்பட்ட நல்ல விளைச்சல் நிலம் நிறைந்த பகுதி என்பதால் பழனி என்ற பெயர் உருவானது.

சித்தர்களில் ஒருவரான போகரால் நவபாசாணத்தில் முருகனின் சிலை வடிவமைக்கப்பட்டது. நவபாசாணம் எனப்படுவது ஒன்பது வகையான நச்சுப்பொருட்கள் சேர்ந்தது. இந்த நவபாசாண சிலை மீன்களைப் போன்ற செதில்களைக் கொண்டதாகக் கூறப்படுகிறது. தற்பொழுது இந்தச் சிலை சிறிது பழுதுபட்டுள்ளது. இரவில் இந்தச் சிலையின் மீது முழுவதுமாக சந்தனம் பூசப்பட்டு (சந்தனக்காப்பு) காலையில் விசுவரூப தரிசனம் செய்யும் அனைத்து பக்தர்களுக்கும் சிறு வில்லை பிரசாதமாக வழங்கப்படுகிறது. இது மிகச்சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது.

## போகர் வரலாறு

போகர் தமிழ் நாட்டிலுள்ள பிரபலமான சித்தராவார். இவர் நவபாஷாண முருகன் சிலையைச் செய்ததே மிகச்சுவையான தகவலாகும். அகத்தியர் தன்னை நாடி வருவோர்க்கு பஸ்பம், வில்லை போன்ற மருந்துகள் அளித்து நோயைக் குணப்படுத்தி வந்தார். போகரோ நவ பாஷாணம் கொண்டு செய்தவில்லைகளை தன்னை நாடி வருவோர்க்கு அளித்து வந்தார்.

அகத்தியரின் மருந்துகளால் சீக்கிரமாக மக்கள் குணமடைந்து வந்தனர். ஆனால் போகரின் மருந்துகளுக்கு வீரியம் அதிகமானதால் மக்கள் உயிரிழந்தனர். இது கண்ட போகர் நவபாஷணத்தால் ஒரு சிலை செய்து அதன் மீது சந்தனத்தைப் பூசி அதிலிருந்து ஒரு குண்டுமணி அளவுக்கு வில்லையாக தன்னை நாடி வருபவர்களுக்கு அளித்து நோயை குணப்படுத்தி வந்தார் என்பது பழனியில் வழங்கி வரும் ஒரு செவிவழி செய்தியாகும்.

## முதல் காவடி

பழனி முருகனுக்கு காவடி எடுப்பது முக்கிய வேண்டுதலாக தற்போது உள்ளது. அந்த வகையில் இந்த காவடி எடுப்பு சம்பவம் முதன் முதலில் உருவாக்கியவர் ஒரு மலையாள தேசத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேரள மாநிலம் எழுபெத்தவீடு என்ற ஊரைச் சேர்ந்த பக்தர் ஒருவர் சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பு காவடியைச் சுமந்து வந்தார். மரம் மற்றும் அலுமினியக் கலவையால் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் காவடியின் ஒரு பக்கத்தில் வள்ளி, தெய்வானை சமேத முருகரும், மற்றொரு பக்கத்தில் சித்தி, புத்தி சமேத விநாயகரும் பொறிக்கப்பட்டுள்ளனர். மலை உச்சியில் போகர் சமாதி பகுதியில் இந்த முதல் காவடியை தற்போது வரை பத்திரமாக பாதுகாத்து வருகின்றனர்.

பழனி மலைக்கோவில் மூன்றாம்படைவீடாக கருதி

னாலும் திருவாவினன்குடி கோவிலைத்தான் மூன்றாம்படைவீடாக சங்க இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சங்ககாலப் புலவரான நக்கீரரும், பிற்காலத்தவரான அருணகிரிநாதரும் திருவாவினன்குடி முருகனைக் குறித்துப் பாடல்கள் பாடியுள்ளனர். அகத்தியர் இங்கு தவம் புரிந்து முருகனிடம் தமிழிலக்கணம் பயின்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

திரு என்கின்ற இலட்சுமி தேவியும், ஆ என்ற காம தேனுவும், இனன் என்ற சூரிய பகவானும், இத்தலத்து முருகப்பெருமானை வழிபட்டமையால் திரு ஆஇனன்குடி என்று பெயர் பெற்றதாக சொல்லப்படுகிறது.



பழநி மலைக்கோவிலுக்கு செல்லும் வழியில், பழநி மலை அடிவாரத்தில் வையாபுரி ஏரிக்கரையில் அமைந்துள்ளது. இக்கோவிலின் வடகிழக்கு திசையில் சரவணப் பொய்கை உள்ளது. இத்தலத்தில் உள்ள பெருமானை வழிபட்ட பின்னரே, மலைக்கோவிலுக்கு சென்று தண்டாயுதபாணியரை வழிபடுவது மரபு.

திருவாவினன்குடி கோவிலையே நக்கீரர் பெருமான், திருமுருகாற்றுப்படையிலே முருகனின் மூன்றாம் படைவீடாக குறிப்பிட்டதுடன்,

"தாஇல் கொள்கை மடந்தையொடு
சில்நாள் ஆவி னன்குடி அசைதலும்
உரியன்: அதாஅன்று"

அதாவது, குற்றம் இல்லாத கோட்பாடுடன், யாவர்க்கும் நன்மையே விளைவிக்கும் உயர்ந்த கொள்கைஉடைய தன் துணைவியோடு சிலகாலம் ஆவினன் குடியில் தங்கியிருப்பதற்கு உரிமை உடையவன் என்று போற்றி பாடியுள்ளார் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

கோபம் கொண்டு வந்து அமர்ந்த இடமான பழநி மலைக்கோவிலில் தண்டாயுதபாணித் தெய்வமாகவும், திருவாவினன்குடி திருத்தலத்தில் மயில் மீது அமர்ந்த குழந்தை வேலாயுத சுவாமியாகவும் காட்சியளிக்கிறார்.

சங்க காலத்தில் இந்த இரண்டு திருத்தலங்களையும் சேர்த்தே இந்த ஊரின் பெயர் திருவாவினன்குடி என்று இருந்ததாக புராணங்கள் சொல்கின்றன.

முருகனின் ஆறுபடை வீடுகளில், ஐந்து படை வீடுகளில் ஒரே தலத்தில் முருகப்பெருமான் காட்சி தந்தாலும், பழனியில் மட்டும் இரண்டு ஸ்தலங்களையும் இணைத்தவாறே தரிசிக்கவேண்டும் என்றும், இந்த தரிசனமே மூன்றாம் படைவீட்டின் தரிசனத்திற்கு நிறைவு தரும் என்றும் கூறப்படுகிறது.




# முருகனின் 16 முக்கிய வடிவங்கள்

**1. ஞானசக்திதரா:** இந்த முருகனை வழி பட்டால் நினைத்த காரியங்கள் வெற்றி யுடன் முடியும். திருத்தணிகையில் எழுந் தருளியிருக்கும் மூலவர் திருவடிவம் ஹஞானசக்திதரா' திருக்கோலமாகும்.

**2.கந்தசாமி:** இவரை வழி பட்டால் சகல காரியங்களும் சித்தியாகும். பழனிமலை ஆண்டவர் திருவடிவம் இது.

**3.ஆறுமுகதேவசேனாபதி:** இவரை வழிபட்டால் மங்கள கரமான வாழ்வு கிடைக்கும். சென்னிமலையாண்டவர் திருக்கோயிலில் கர்ப்பக்கிரக மாடம் ஒன்றில் இந்த திருவுரு வம் உள்ளது.

**4. சுப்பிரமணியர்:** இவர் தன்னை வழிபடும் பக்தர் களின் வினைகளை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளிக் கக் கூடியவர். நாகை மாவட்டத்திலுள்ள திருவிடைகழி முருகன் கோயில் மூலவர் சுப்பிரமண்யர் ஆவார்.

**5.கஜவாகனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள்விலகி ஓடும். திருமருகல், மேல்பாடி, சிதம்பரம் நடராஜர் கோயில் கீழைக் கோபுரம் ஆகிய இடங்களில் யானை மீதிருக்கும் இவரது திருவுருவம் உள்ளது.

**6.சரவணபவர்:** தன்னை வழிபடும் அடியவர்களுக்கு மங்கலம், ஒலி, கொடை, சாத் வீகம், வீரம் முதலிய குணங்களை அளிப்பவர். சென்னிமலை, திருப்போரூர் ஆகிய இடங்களில் இவரது திருவடிவம் இருக்கிறது.



**7. கார்த்திகேயர்:** இவரை வழிபட்டால்சகல சவுபாக்கியங்களும் வந்து சேரும். கார்த் திகை நட்சத்திர நாட்களில் இவரைவழிபடுவது விஷேசமான பலன்களைத் தரும். கும்பகோணத் தில் உள்ள கும்பேஸ்வரர் கோயி லிலும், தாராசுரம் ஐராவதீச்வரர் கோயிலிலும் கார்த்திகேயர் திருவுருவம் உள்ளது.

**8. குமாரசாமி:** இவரை வழிபட் டால் ஆணவம் அடியோடு நீங்கும். நாகர்கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலில் இவரது திருவடி வம் உண்டு. கங்கை கொண்ட சோழபுரத்தில் இவருக்குப் பஞ்சலோக விக்கிரகம் இருக் கிறது.

**9. சண்முகர்:** இவரை வழிபட்டால் சிவசக்தியை வழி பட்ட பலன் கிடைக்கும். திருச்செந்தூரில் உள்ள முருகன் அருட் கோலம் சண்முகர் திருவடிவாகும்.

**10. தாரகாரி:** ஹதார காசுரன்' என்னும் அசு ரனை அழித்ததால் முருகப் பெருமான் இத்திரு நாமத் தைப் பெற்றார். உலக மாயைகளில் இருந்து விடுபட வழிசெய்யும் திருக் கோலம் இது. விராலி மலையில் உள்ள முருகன் கோயிலில் தாரகாரி இருக் கிறார்.

**11.சேனானி:** இவரை வழிபட்டால் பகைஅழியும். வெற்றி கிடைக்கும். பொறாமை நீங்கும். தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திருவுருவம் இருக்கிறது.

**12. பிரம்மசாஸ்தா:** இவரை வழிபட்டால் எல்லா வகைவித்தைகளிலும் தேர்ச்சி பெறலாம். சகல வித கலையறிவும் அதிகரிக்கும். கல்வியில் தேர்ச்சி கிட்டும். காஞ்சிபுரத்தில் உள்ள குமரக்கோட்டம் ஆனூர், பாக சாலை, சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது.

**13. வள்ளிகல்யாணசுந்தரர்:** இவரை வழிபட்டால் திருமணத் தடைகள் அகலும், கன்னிப் பெண் களுக்குக் கல்யாண பாக்கியம் கிடைக்கும். திருப்போரூர் முருகன் கோயில் தூண் ஒன்றில் இவர் திருவுருவம் இருக்கிறது.

**14. பாலசுவாமி:** இவர், உடல் ஊனங்களையும், குறைகளையும் அகற்றும் தெய்வம். இவரை வழிபடுபவர் களுக்கு உடல் நலம் கிடைக்கும். திருச்செந்தூர், திருக் கண்டிர், ஆண்டாள் கும்பம் கோயில்களில் பாலசுவாமி திருவுருவம் இருக்கிறது.

**15. சிரவபுஞ்சபேதனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் அகலும். திருநெல்லிக்கா, திருக்குறுங்குடி, திருநளி பள்ளி ஆகிய இடங்களில்இவரது திருவுருவம் உண்டு.

**16. சிகிவாகனர்:** மயில் மீது இருக்கும் முருகன்அருட் கோலம் இது. ஆலயம் பலவற்றில் அழகுற அமையும் திருவடிவம். தன்னை வழிபடுபவர்களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர்.



ஆயுதபூஜை விஜயதசமி வாழ்த்துக்கள்
மதுரை கலையகம்
கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள்,
பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.

V.சுந்தரவடிவேல்
Visit:
www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939
27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1


aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

# பழனி முருகன் கோவில் அலங்கார பூஜை நேரம்



பழனி முருகன் ஒவ்வொரு நாளும் எந்த எந்த நேரத்தில் என்னென்ன பூஜையில் எந்த வித அலங்காரத்தில் காட்சியளிப்பார் என்று இந்த பதிவில் பார்க்கலாம்.

பழனி முருகன் காலை 06.40AM மணிக்கு விளா பூஜையில் சன்யாசி அல்லது ஆண்டி அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

காலை 08.00 AM மணிக்கு நடைபெறும் சிறுகாலசந்தி என்ற பூஜையில் பால சுப்பிரமணியர் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

காலை 09.00 AM மணிக்கு நடைபெறும் காலசந்தி பூஜையில் பாலசுப்பிரமணியர் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

மதியம் 12.00 PM மணிக்கு நிகழும் உச்சிக்கலாம் பூஜையில் வைதிகாள் அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

மாலை 05.30 PM மணிக்கு நடக்கும் சாய ரட்சை பூஜையில் இராஜ அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

இரவு 08.00 PM மணிக்கு நடைபெறும் அர்த்தஜாம பூஜையில் புஷ்ப அலங்காரத்தில் காட்சியளிப்பார்.

மேல் கூறப்பட்டுள்ள நேரங்களில் உங்களுக்கு விருப்பான அலங்கார பூஜை நேரத்தில் சென்று தமிழ் கடவுளான பழனி முருகனை தரிசித்து அவன் அருளை பெறுங்கள்.

# 2024 பௌர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நாட்கள்

| மாதம் | தேதி | கிழமை | கிரிவலம் செல்ல ஏற்ற நேரம் |
|---|---|---|---|
| ஜனவரி | 25 | வியாழன் | ஜனவரி 24ம் தேதி இரவு 10.44 முதல் ஜனவரி 25ம் தேதி இரவு 11.56 வரை |
| பிப்ரவரி | 24 | சனி | பிப்ரவரி 23ம் தேதி மாலை 04.55 முதல் பிப்ரவரி 24ம் தேதி மாலை 06.51 வரை |
| மார்ச் | 24 | ஞாயிறு | காலை 11.17 முதல் மார்ச் 25 ம் தேதி பகல் 01.16 வரை |
| ஏப்ரல் | 23 | செவ்வாய் | காலை 04.21 முதல் ஏப்ரல் 24ம் தேதி காலை 05.54 வரை |
| மே | 23 | வியாழன் | மே 22ம் தேதி இரவு 07.14 முதல் மே 23ம் தேதி இரவு 07.48 வரை |
| ஜூன் | 21 | வெள்ளி | காலை 07.45 முதல் ஜூன் 22ம் தேதி காலை 07.19ம் தேதி வரை |
| ஜூலை | 21 | ஞாயிறு | ஜூலை 20ம் தேதி மாலை 06.10 முதல் ஜூலை 21ம் தேதி மாலை 04.51 வரை |
| ஆகஸ்ட் | 19 | திங்கள் | அதிகாலை 03.07 முதல் ஆகஸ்ட் 20ம் தேதி அதிகாலை 01.09 வரை |
| செப்டம்பர் | 17 | செவ்வாய் | காலை 11.22 முதல் செப்டம்பர் 18ம் தேதி காலை 09.10 வரை |
| அக்டோபர் | 17 | வியாழன் | அக்டோபர் 16ம் தேதி இரவு 07.56 முதல் அக்டோபர் 17ம் தேதி மாலை 05.25 வரை |
| நவம்பர் | 15 | வெள்ளி | அதிகாலை 03.53 முதல் நவம்பர் 16ம் தேதி அதிகாலை 03.42 வரை |
| டிசம்பர் | 15 | ஞாயிறு | டிசம்பர் 14ம் தேதி மாலை 04.17 முதல் டிசம்பர் 15ம் தேதி மாலை 03.13 வரை |

# 2024 – ஆம் ஆண்டு அமாவாசை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 11 வியாழன் | மார்கழி 26 | ஜனவரி 10ம் தேதி இரவு 08.05 முதல், ஜனவரி 11ம் மாலை 06.31 வரை |
| பிப்ரவரி | 09 வெள்ளி | தை 26 | காலை 07.53 முதல் பிப்ரவரி 10 ம் தேதி காலை 04.34 வரை |
| மார்ச் | 10 ஞாயிறு | மாசி 27 | மார்ச் 09ம் தேதி மாலை 06.01 முதல் மார்ச் 10 தேதி மாலை 03.39 வரை |
| ஏப்ரல் | 08 திங்கள் | பங்குனி 26 | அதிகாலை 02.55 முதல் ஏப்ரல் 09 ம் தேதி அதிகாலை 12.36 வரை |
| மே | 07 செவ்வாய் | சித்திரை 24 | காலை 11.18 முதல் மே 08ம் தேதி காலை 09.19 வரை |
| ஜூன் | 06 வியாழன் | வைகாசி 24 | ஜூன் 05 ம் தேதி இரவு 07.56 முதல் ஜூன் 06 மாலை 06.40 வரை |
| ஜூலை | 05 வெள்ளி | ஆனி 21 | காலை 04.56 முதல் ஜூலை 06 ம் தேதி காலை 5 மணி வரை |
| ஆகஸ்ட் | 04 ஞாயிறு | ஆடி 19 | ஆக. 03 ம் தேதி மாலை 04.56 முதல் ஆக. 04 மாலை 05.32 வரை |
| செப்டம்பர் | 02 திங்கள் | ஆவணி 17 | காலை 06.33 முதல் செப்டம்பர் 03 ம் தேதி காலை 07.59 வரை |
| அக்டோபர் | 02 புதன் | புரட்டாசி 16 | அக். 01ம் தேதி இரவு 10.35 முதல் அக். 03 அதிகாலை 12.34 வரை |
| நவம்பர் | 01 வெள்ளி | ஐப்பசி 15 | அக். 31ம் தேதி மாலை 04.29 முதல் நவம்பர் 01 மாலை 06.25 வரை |
| | 30 சனி | கார்த்.15 | காலை 11.04 முதல் டிசம்பர் 01 ம் தேதி பகல் 12.19 வரை |
| டிசம்பர் | 30 திங்கள் | மார்கழி 15 | காலை 04.44 முதல் டிசம்பர் 31 ம் தேதி காலை 05.03 வரை |

# மதுரையில் மகா பெரியவா கோவில்

## தினந்தோறும் அன்னதானம் வழங்கும் மதுரையின் அட்சய பாத்திரம்

காஞ்சியின் கருணைக்கடல் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா' நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். அவரை ஆத்மார்த்த குருவாக ஏற்றுக் கொண்ட பக்தர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நெகிழ்ச்சியான பல நிகழ்ச்சிகளே அதற்குச் சான்று. காஞ்சியில் அருளும் ஸ்ரீ காமாட்சியின் அருளுக்குப் பாத்திரமான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா, மீனாட்சி அருளாட்சி செய்யும் மீனாட்சி பட்டணமான மதுரையில் குடி கொண்ட வரலாறும் நெகிழ்ச்சியாக இருக்கிறது.

மகா பெரியவாவின் தொண்டர்களில் ஒருவர் நெல்லை பாலு. காஞ்சிபுரத்தில் பத்திரிக்கையாளராக பணியாற்றி காஞ்சி மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சேவை செய்து வந்தவர். மகா பெரியவரின் காலத்திற்கு பிறகு, குடும்ப சூழல் காரணமாக மதுரைக்கு இடம் பெயர்ந்தார். மகா பெரியவாவின் தீவிர பக்தரான இவருக்கு அடிக்கடி காஞ்சிபுரம் சென்று தரிசிக்க இயலவில்லையே என்ற மனக்குறை மட்டும் தீரவில்லை. எனவே, மதுரையில் அனுஷத்தின் அனுகிரகம் என்ற அமைப்பை தொடங்கி மகா பெரியவரின் பிறந்த நட்சத்திரமான ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், மதுரையிலேயே பொது இடத்தில் அவரது படங்களை வைத்து பூஜிப்பதை வழக்கமாக செய்து வந்தார். பெரியவா குறித்த சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்து வந்தார். இவ்வாறு, பூஜைகளும், வழிபாடுகளும் தொடர்ந்தன. இதில் கலந்து கொண்ட பல பக்தர்களும் மதுரையில் பெரி யவருக்கு ஒரு வழிபாட்டுத்தலம் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற தங்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வந்தனர். அதன் பின்னர் அரங்கேறிய சம்பவங்கள் தான் காஞ்சி பெரியவரின் அனுக்கிரகம்.

அது பற்றிப் பேசிய நெல்லை பாலு, "2012 ஆம் ஆண்டில், மகா பெரியவரின் வருடாந்திர ஜெயந்தி விழாவிற்கு சுமார் 2 வாரங்களுக்கு முன்பாக, கனவில் மகாபெரியவரின் விக்ரகம் ஒன்று தொடர்ச்சியாக வந்தது. அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காஞ்சி மடத்திற்கு சென்று விட்டேன். ஜெயேந்திரரிடம் கனவைப் பற்றியும் பகிர்ந்து கொண்டேன். நான் கூறியபடி ஒரு சிலையை பக்தர்கள் இதற்கு முன்பாக மடத்திற்கு கொடுத்துள்ளதாகவும் அப்போது அவர் தெரி வித்தார். பின்னர், மகாபெரியவரின் அதிஷ்டானத்தில் வழிபட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.


அப்போது, மடத்திற்கு வந்திருந்த சுமார் ஏழு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் என்னருகே வந்து, 'சிலை விஷயமாத்தானே புது பெரியவாவிடம் பேசுனீங்க!' எனக் கேட்க, ஒரு கணம் அதிர்ந்தே போய் விட்டடேன். நான் உள்ளே பேசியது வெளியில் இருந்த





சிறுவனுக்கு எப்படித் தெரியும்? என வியப்பு எனக்கு! அதற்குமேல் பேசாத அந்தச் சிறுவன், ஒரு தொலைபேசி எண்ணை மட்டும் கொடுத்துவிட்டு விறுவிறுவென அங்கிருந்து நடையைக் கட்டி விட்டான். அங்கு அந்தச் சிறுவனை தவிர வேறு யாரும் இல்லை. ஒருவேளை பெற்றோர்களுடன் வந்திருந்தாலும் கூட, அப்படி யாரும் அங்கு இருந்ததாகவும் தெரியவில்லை.

குழப்பத்தோடு, சிறுவன் கொடுத்த எண்ணை தொடர்பு கொள்ள, எதிர்முனையில் பேசியவர் கும்பகோணத்தில் இருந்த ஒரு சிற்பி. 'இது பெரியவாவின் அனுக்கிரகம்!' என்று அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். கனவில் கண்டபடி சிலை வடிக்க வேண்டும் என்று ஸ்தபதியிடம்







கேட்க, அவ்வாறு சிலை வடிக்க தாமதம் ஆகும் என்று சொன்ன சிற்பி, ஏற்கனவே காஞ்சிப் பெரியவரின் ஒரு சிலை தயாராக இருப்பதாகச் சொல்லி, சிலையையும் மதுரைக்கு அனுப்பி விட்டார்" என்றார் வியப்பு குறையாமல்.

அதன்பின்னர், பக்தர்களின் பங்களிப்புடன் சிலையை பிரதிஷ்டை செய்து, 'ஸ்ரீ மஹா பெரியவா க்ருஹம்' என்னும் பெயரில் வழிபாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மதுரையில் குடி கொண்டு, பக்தர்களுக்குத் தன் அருளாசியை வழங்கி வருகிறார் மகா பெரியவா. காஞ்சிப்பெரியவர் தனது கடைசி கால கட்டத்தில் இருந்த தோற்றத்தில் உள்ளது இங்குள்ள சிலை. உடல் மெலிந்து, நெஞ்சின் விலா எலும்புகள் புடைப்பாக தெரியும்படி தத்ரூபமாக இருக்கிறது. காஞ்சிபுரம் மடத்தில் ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், தங்கச் சப்பரத்தில் அவரது சிலை உலா வரும். கிட்டத்தட்ட அந்தச் சிலையை ஒத்த அளவிலேயே இங்குள்ள சிலையும் அமைந்திருப்பது சிறப்பு.

மதுரையில் மகாபெரியாவா ஆசியுடன் தினந்தோறும் உணவு வழங்கும் அட்சய பாத்திரம் மதுரை அனுஷத்தின் அனுகிரகம் ஸ்தாபகர் நெல்லை பாலு மதுரையில் கொரோனா காலத்தில் இருந்து ரோட்டோரம் உள்ள ஆதரவற்றோர் முதியோர் மற்றும் அரசுமருத்துவ மனையில் உள்ள நோயாளிகள் ஆகியோர்க்கு தினந்தோறும் மதிய உணவை நேரில் சென்று வழங்கிவருகிறார்.


மகா பெரியவா ஆசியுடன் மதுரையின் அட்சய பாத்திரம் என்ற டிரஸ்டை தொடங்கி தற்போது வரை 900 நாட்களாக உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த சேவையை முன்னாள் அமைச்சர்கள் மாவட்ட ஆட்சியர், ஆன்மிக பெரியோர்கள் பாராட்டி வருகின்றனர்.

மதுரை மகா பெரியவா ஆலய தொடர்புக்கு 9442630815

எங்கே இருக்கிறது? மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள, எஸ்.எஸ்.காலனி எண் 13 பொன்மேனி நாராயணன் ரோட்டில் அமைந்துள்ளது. அரசரடி அல்லது காளவாசல் பஸ் ஸ்டாப்பில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோவில் செல்லலாம்.

திறப்பு நேரம் காலை 8 10 மணி, மாலை 5 இரவு 8 மணி, தொடர்புக்கு: 94426 30815

தரிசிக்க வாருங்கள்!
காஞ்சி
ஸ்ரீ மஹா பெரியவா
கோவில் (க்ருஹம்)
13, பொன்மேனி நாராயணன் ரோடு,
எஸ்.எஸ்.காலனி, மதுரை.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருவார தினத்தன்று சிறப்பு புஷ்பாஞ்சலி நடைபெறும். வியாழன் அன்று நடைபெறும் குருவார நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் ஸ்படிக மாலை பிரசாதமாக வழங்கப்படும். அனுஷ நட்சத்திர தினத்தன்று ஸ்ரீ மஹா பெரியவா விக்ரஹம் மற்றும் வெள்ளி பாதுகைக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும்.

அனுஷ வைபவத்திற்கு தங்களின் அருட்கொடையினை வழங்கிட அன்பு வேண்டுகோள்



ஸ்ரீ மஹா பெரியவா அருட்பணியில்...
Rtn.நெல்லை பாலு,
நிறுவனர், அனுஷத்தின் அனுகிரஹம்
செல் : 9442630815(G-Pay)



# போகர் உருவாக்கிய இரண்டாவது நவபாஷான முருகன்

கொடைக்கானலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பூம்பாறை கிராமம். இந்த முருகன் நினைத்தால் தான் நாம் இங்கு வர முடியும்" இந்த தேதியில், இந்த நேரத்தில் வரவேண்டும் என்பது அவன் விருப்பம் . மிகவும் சக்திவாய்ந்த நவபாசான முருகன்.

இந்தியாவில் உள்ள எல்லா கோவில்களிலும் ஐம்பொன் வெங்கலம் கற்களால் ஆன சிலைகள்தான் உள்ளன. ஆனால் இந்தியாவில் உள்ள இரண்டு கோவில்களில் மட்டுமே நவ பாஷானத்தால் உருவாக்கப்பட்ட அபூர்வமான சிலைகள் உள்ளன.

1. பழனி மலை மீதுள்ள தண்டாயுதபாணி முருகன் சிலை,
2. பூம்பாறை மலையில் உள்ள குழந்தை வேலப்பர் முருகன் சிலை.

உலகிலேய நவபாஷான சிலையை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் போகர் ஆவார். பழனி முருகன் சிலையை மட்டுமின்றி இந்தப் பூம்பாறை முருகன் சிலையையும் செய்தவர் போகர்.

பழனி மலைக்கும், பூம்பாறை மலைக்கும் நடுவில் உள்ள யானை முட்டி குகையில் தான் நவபாஷான முருகன் சிலையை உருவாக்கினார். அந்த சிலையைத் தான் பழனி மலை மீது பிரதிஷ்டை செய்தார். தண்டம் கொண்டு அச்சிலையை உருவாக்கியதால் அதற்கு தண்டாயுதபாணி என்று பெயர் சூட்டினார்.

அக்கோவிலை இறைவனிடம் வேண்டி சிவ பூதங்களால்கோவில் மற்றும் மண்டபகங்களை கட்ட செய்தார் என்பது வரலாறு.

பின்னர் மறுபடியும் சீன நாட்டிற்கு சென்று பஞ்சபூத சக்திகளை மீண்டும் பெற்று யானை முட்டி குகைக்கு வந்து ஞான நிலையை அடையும் பிரம்மத்தை உணர்ந்து கொள்ளவும் ஆதிபராசக்தியின் துணை கொண்டு குருமூப்பு என்ற அருமருந்தை நிலைநிறுத்த வும் பஞ்ச பூதங்களை நிலைப்படுத்தி அதன் மூலம் குருமூப்பு சிலையை உருவாக் கினார். அந்த சிலைதான் பூம்பாறை மலையுச்சியிலுள்ள குழந்தை வேலப்பர் சிலையாகும்.

ஒரு சமயம், அருணகிரிநாதர் பூம்பாறை மலையில் வீற்றிருந்த குழந்தையப்பரை தரிசிக்க வந்தார். அப்போது இரவு நேரமானதால் கோவில் மண்டபத்தில் தங்கி தூங்கி விட்டார்.

அப்போது ராட்சசி ஒருவள் அருணகிரிநாதரை கொல்ல வந்தபோது முருகன் குழந்தை வடிவம் கொண்டு காவியுடை அணிந்திருந்த அருணகிரி நாதர் மீது ஏறி விளையாடிக் கொண்டிருந்ததைக்கண்டு குழந்தையும் தாயும்தான் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணி அருணகிரிநாதரைக் கொல்லாமல் சென்று விட்ட தாம். இதனை தனது ஞான திருஷ்டியால் நடந்த சம்பவத்தை கண்டு குழந்தை வேடம் வந்து தன் உயிரை காப்பாற்றியதால் குழந்தை வேலர் என்று அழைக்கப்பட்டு குழந்தை வேலப்ப ராக இன்றும் அருள் பாலித்து வருகிறார். அவரின் பக்கத் திலேலே அருணகிரிநாதருக்கும் சிலையுடன் கோவில் உள்ளது.







aanmeegamalar.com

aanmeegamalar.com

# நீங்களும் உதவலாமே!

நன்கொடைகளுக்கு வருமான 80G வரிவிலக்கு உண்டு

Regd. No. 4-50/2021

## தொடர்ந்து 975 நாட்களாக

## மதுரையில் ரோட்டோரத்தில் பசியால் தவிக்கும் வறியவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தினமும் 300 பேருக்கு மதிய உணவு வழங்கும்

## மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட் சேவைக்கு நீங்களும் உதவலாமே!

### இயலாதவர்களுக்கு உணவு வழங்குவது மூதாதையருக்கு திதி கொடுத்த புண்ணியம் கிடைக்கும்



மதுரையில் வீதியோரத்தில் உணவுக்காக தவித்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கு "மதுரையின் அட்சயப் பாத்திரம்" என்ற அமைப்பை தொடங்கி கடந்த 950 நாட்களுக்கு மேலாக தினந்தோறும் 300 பேருக்கு உணவு வழங்கி வருகிறோம். தங்களது திருமண நாள், பிறந்த நாள், குழந்தைகளின் பிறந்த நாள், மூதாதையர்களின் நினைவு நாள் போன்ற நாட்கள், பிற நாட்களிலும் இந்த புனிதப் பணிக்கு உதவிட அன்புடன் வேண்டுகிறோம்.

வாடிய பயிரை கண்டபோதெல்லம் வாடினேன் - வள்ளலார்

**ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூ.40 வீதம் 300 பேருக்கு ரூ.12000 ஆகிறது**

| | | |
|---|---|---|
| 25 | நபர்களுக்கு | ரூ.1,000 |
| 50 | நபர்களுக்கு | ரூ.2,000 |
| 100 | நபர்களுக்கு | ரூ.4,000 |
| 200 | நபர்களுக்கு | ரூ.8,000 |
| 250 | நபர்களுக்கு | ரூ.10,000 |
| 300 | நபர்களுக்கு | ரூ.12,000 |



மதுரையின் அட்சயபாத்திரம் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு சென்னையில் நடைபெற்ற விழாவில் சிறந்த சமூக சேவகருக்கான விருதினை இசையமைப்பாளர் சங்கர் கணேஷ் வழங்குகிறார். அருகில் நடிகர் பப்லு, நடிகர் இமான் அண்ணாச்சி

**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு கோச்சடை, மதுரை-16
9442630815 (G-Pay)

**Account Details:**
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank - Madurai West Avani Moola Street
A/C No:110031396472
IFSC CODE : CNRB0001010 , MICR CODE : 625015006



மதுரையின் அட்சயபாத்திரம் அமைப்பு தொடங்கப்பெற்று ரோட்டோரத்தில் உள்ள வறியவர்களுக்கு உணவு கொடுக்கும் திட்டத்தின் 950 நாள் நிறைவு பெற்றதை முன்னிட்டு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு **எடப்பாடி கே. பழனிச்சாமி** அவர்களிடம் மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலு வாழ்த்து பெற்ற போது எடுத்த படம். அருகில் சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான **ஆர்.பி. உதயகுமார்** அவர்கள் உள்ளார்.



# அழகிய அற்புத சிற்ப வேலைபாடுகளுடன் கோவில்களை கட்டும்: ஸ்தபதி சண்முகம்







தமிழகத்தில் கலாச்சாரத்தில் கோவில்களுக்கு முக்கிய பங்குண்டு. சிற்பகலைகளை பறைசாற்றும்கோவில்கள் அனைத்தும்மன்னர்கள் கட்டியதாகத் தான் இருக்கும் அக்கோவில்கள் பெரும்பாலும் முழுமையாக கற்களினால் உருவாக்கப்பட்டதாகஇருக்கிறது. அத்தகைய கோவில்களில் சிற்பிகளால் தங்கள் முழு திறமையையும் காட்ட முடியும். ஆனால் இந்த காலத்தில் அப்படிபட்ட கோவில்கள் உருவாக்கப் படுவதில்லை. அந்த அளவுக்கு தற்காலத்தில் கலைஞர்களும் அதிகம் இல்லை. ஆனால் அந்த கற்கோவில் கலைஞர்கள் இன்னும் ஓரிருவர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் சண்முகம் ஸ்தபதி. சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வசிக்கும் பரமக்குடி தெளிச்சாத்தநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர்.

இவர் கல்லிலேயே கோவில் அமைப்பதில் பிரசித்தி பெற்றவர். இவர் சென்னை வள்ளுவர் கோட்டம், கன்னியாகுமாரி விவேகானந்தர் மண்டபம் செய்த ஸ்தபதிஎஸ்.கே. ஆச்சாரியாரிடம் 22 வருடம் உதவி சிற்பியாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர கர்நாடக மாநிலத்தில் புகழ் பெற்ற பலகோவில் திருப்பணிவேலைகளில் பங்கு பெற்று, அழகிய கோவில்களை கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறார். இவர் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கலை அம்சத்தோடு கோவில்களை கட்டி வருகிறார். குறிச்சி காசி விஸ்வநாதர் கோவில், வேலூர் அழகு நாச்சியம்மன் கோவில், இடைகாட்டூர் பாலமுருகன் கோவில் என இது வரை 500க்கும் மேற்பட்ட கோவில் பணிகளை முடித்துள்ளார். பத்துஆண்டுகளுக்கு முன்பு மானாமதுரை வேதியரேந்தல் விலக்கில் அமைந்துள்ள ஸ்ரீ மகா பஞ்சமுக பிரித்தியங்கிரா தேவி கோவில் முழுவதுமே கருங்கல்லாலே திருப்பணி வேலையை செய்து உள்ளார்.

இந்த கோவில் இவரது சிற்பகலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த கோவில் வளாகத்தில் கொடிமர கணபதி சொர்ணாஹா பைரவர், லட்சுமி கணபதி, பலிபீடம் போன்றவை முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது.

இது தவிர தற்போது சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் புதிய வடிவில் கோவில் அமைத்து வருகிறார். பல கிராமங்களில் நின்றுபோய் உள்ள கோவில் திருப்பணிகளை கண்டு அறிந்து சிற்பசாஸ்திர குறைபாடுகளை களைந்து திருப்பணிகளையும் செய்துள்ளார். ராஜகலைஞன் சிற்ப கலாரத்னா, மில்லியன் கோல்ட் கௌரவ டாக்டர் பட்டமும் பாராட்டு பெற்று உள்ளார்.

தெளிச்சாத்தநல்லூர் சண்முகம் ஸ்தபதி கூறும் போது "கோவில் கட்டி திருப்பணி செய்தால் கோடிபலன் கிடைக்கும். புல்லினால் கோவில் அமைத்தால் கோடி பலனும், புதுமண்ணால் அமைத்தால் 100 கோடி பலனும், துல்லிய தூய செங்கலினால் அமைத்தால் 300 கோடி பலனும் கிடைக்கும். ஆனால் கருங்கல்லினால் அமைத்தால் கையில் வைகுண்டம் என்ற அளவுக்கு புண்ணியம் கிடைக்கும். அந்த அளவுக்கு கல்லில் அமைக்கப்படும் கோவிலுக்கு சிறப்பு உண்டு. என தெரிவித்தார்.

கலைநயத்தோடு கருங்கல் கோவில் திருபணிவேலைகளை செய்யும் ஸ்தபதி சண்முகத்தை தஞ்சை குருஜி கணபதி சுப்பரமன்யம் சாஸ்திரி, பஞ்ச முகப்ரத்தியங்கிராதேவிகோவில் சுவாமி ஜி,குன்றக்குடி மடாதிபதி பொன்னம்பலம் அடிகளார், பிள்ளையார் பட்டி கற்பகவிநாயகர் கோவில் ஸ்ரீ சிவபிச்சைகுருக்கள் முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் டிரஸ்டி ஆன்மிக செம்மல் எஸ்பிதேவர் ஆகியோர் பாராட்டி வாழ்த்தி உள்ளார்கள்.



aanmeegamalar.com

# தெய்வீக ஆற்றல் கிடைக்கும் கருப்பனேந்தல் மடம்

## மண்ணில் புதையுண்ட முருகனை அடையாளம் காட்டிய சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடம் இங்கு மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர் ஜீவஒடுக்க கோவிலாகும். இந்த இடத்தை சுற்றி ஏராளமான வயல் வெளிகளும் நீர்நிலைகள் உள்ளது.




கருஎன்றால் உயிர் ஏந்தல் என்றால் நீர்நிலைகள் உள்ள பகுதியாகும். ஆல், அரசு, வேம்பு, வில்வம், போன்ற உயிர் வளர்க்கும் மரங்களாகும். இந்த அணுக்கள் மூலமாக வித் திட்டு வாழ்ந்த மகான்கள் சூட்டுகோல் ராமலிங்க சுவாமி, சித்தர் செல்லப்பாசுவாமி, மகாசித்தர் மாயாண்டி சுவாமி, பிராமணத்திஅம்மாவும், சிலம்பு சுவாமி, பொன்னின் அம்மையார் போன்றவர்கள் வாழ்ந்த இடமாக கருப்பனேந்தல் மடம் இருந்து உள்ளது. நீரநிலைகள் நிறைந்தஇப்பகுதியில் மகான்கள் வாழ்ந்து பிராண உயிர் காற்றை மண்ணில் பரப்பிய இடமாகவும் ஞானபீடமாகவும் பக்தர்களின் மனகுறைகளை அறிந்து மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சித்தர் தீர்பதாகவும் சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கமாகவும் கருப்பனேந்தல் மடம் உள்ளது.



தற்போது கருப்பனேந்தல் மடத்தில் பக்த்தர்களின் கைங்கர்யம் மூலம் புதிதாக தத்ரூபமாக வெள்ளி சூட்டுகோல் ஐம்பொன்னால் மகாசித்தர் மாயாண்டி சுவாமி சிலை பிரதிஷ்டை மற்றும் புதிய மயில் வாகனம் கருப்பனேந்தல் மடத்தில் உள்ளது. தினமும் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.



பார்த்திபனூருக்கும் கமுதிக்கும் இடையில் கொடும்பளூர் என்ற சிற்றூர் உள்ளது. அங்கு சுவாமி கள் முள் படுக்கையில் படுத்திருந்தார். அப்போது அவ்வூர் மக்களிடம் இந்த இடத்தில் முருகன் சிலை ஒன்று மண்ணில் புதைந்து கிடக்கிறது. தோண்டி எடுத்து வழிபட வேண்டும் என்று கூறினார். மக்கள் அவ்விடத்தைத் தோண்ட அழகான முரகன் சிலை கிடைத்தது. அங் கோயில் கட்டி மண்ணில் புதைந்து கிடந்து முருகன் சிலையை பிரதிஷ்டை செய்து திருவிழாக்கள் நடத்தி வணங்கி வருகின்றனர்.




கீதா சமையல்

geetha samayal YouTube channel

ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன


aanmeegamalar.com

# தண்ணீரை பாலாக மாற்றிய செல்வ முருகன்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையோரத்தில் உள்ள கால்பிரிவு கிராமத்தில் தண்ணீரை பாலாக மாற்றிய செல்வ முருகன் திருக்கோவில் உள்ளது. கால்பிரிவு கிராமத்தை சேர்ந்த ஸ்ரீ ஆறுமுக சுவாமி என்ற தீவிர முருக பக்தர் முருகனுக்கு சிறு கோவில் அமைத்து பூஜைகள் செய்து வந்தார்.

எப்போதும் முருகன் மீது தீராத அன்பு கொண்ட அவர் தினமும் பாலபிஷேகம் செய்தும் பூஜை செய்து வந்தார்.

100 ஆண்டுகளுக்கு முன் பங்குனி உத்திரதினம் செல்வமுருகனுக்கு அபிஷேகத்திற்கு வழங்கும் பாலை கன்று குட்டி குடித்து விட்டதாகவும், அபிஷேகத்திற்கு பால் இல்லை என்று பால் வழங்கும் விவசாயி தெரிவித்து விட்டார்.

செல்வ முருகன் அபிஷேகத்துற்கு பால் இல்லை என முருக பக்தர் ஆறுமுக சுவாமி மனம் வருந்திய போது 'திடீர்' என்று வைகை ஆற்றில் ஊற்று தோன்றி குடம் செம்புகளில் தண்ணீர் நிரப்பி அபிஷேகம் செய் என தென் பகுதியில் இருந்து கணீர் குரல் ஒலித்து மறைந்தது.

திருச்செந்தூர் முருகனே கூரியது போல் உடனே ஆறுமுக சுவாமி மற்றும் கிராம மக்கள் வைகை ஆறு சென்று குடம், செம்பு பாத்திரங்களில் ஆற்று நீரை நிரப்பி செல்வமுருகன் கோவிலை நோக்கி ஊர்வலமாக வந்து கோவிலை வந்து அடைந்த போது தண்ணீர் நிரம்பிய குடம் செம்பு பாத்திரங்களில் பால் பொங்கி வழிந்தது.

அதை தொடர்ந்து செல்வமுருகனுக்கு குடம் குடமாக தண்ணீரை அபிஷேகம் செய்தபோது அனைத்தும் பாலாக மாறியது பால் அபிஷேகமும் தங்கு தடையின்றி நடந்தது.

நாகலிங்க பூமரம், தென்னை மரங்கள் அழகிய வயல்வெளி பகுதியில் அமைந்து உள்ளது.செல்வமுருகன் கோவில் இக்கோவில் வாசலில் மகா கணபதியும், செல்வ முருகன் வள்ளி தெய் வானையுடன் காட்சி தருகிறார். காவல் தெய்வமாக இடும்பன் சுவாமியும் உள்ளது. கோவில் முன்பு அரசமரம், வேம்புமரம் இணைந்த மரத் தடில் இருநாகர் தெய்வங்கள் விநாயகர் சன்னதியும் உள் ளது. சிறிய கோவிலாக இருந்த செல்வமுருகன் கோவில் 2003ம் ஆண்டு பெரிய கோவிலாக கட்டி கும்பாபிஷேகம் நடந்தது. வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை தரும் செல்வ முருகனாக இங்கு காட்சி அளிக்கிறார்.

ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழா மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இதில் ஏராள மான பக்தர்கள் வைகை ஆற்றில் இருந்து தீர்த்த காவடி, பால்காவடி, அலகு குத்தியும் நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர். அன்று முருகனுக்கு நடைபெறும் பால் அபிஷேகத்தை காண ஏராளமானோர் கோவிலுக்கு வருவார்கள்.

இதுபற்றி கோவில் ஸ்தாபகர் ஏ.ஆர்.பி. முருகேசன் கூறுகையில், தண்ணீரை பாலாக மாற்றியதால் பச்சை தண்ணீரை பாலாக மாற்றிய செல்வமுருகன் எனவும் அழைக்கப்படுகிறது.

கடும் வறுமையில் வாடுபவர் செல்வமுருகனை மன முருகி வணங்கி இன்றும் செல்வநிலை



அடைந்து உள்ளனர். வேண்டுதல் நிறைவேறியவர்கள் ஆண்டு தோறும் பங்குனி உத்திர திருவிழா அன்று குடம் குடமாக பால் அபிஷேகம் செய்கின்றனர்.

ஒன்பது சஷ்டி தினம் அன்று விரதம் இருந்து செல்வ முருகனை வணங்கினால் குழந்தை இல்லாதவர்களுக்கும் குழந்தை பாக்கியம் கிடைப்பதாகவும் நம்பப்படுகிறது. பங்குனி உத்திரம் பெரிய திரு விழாவாக நடத்தப்படுகிறது. வயலூர் முருகன் கோவில் நினைவுபடுத்துவது போல் இயற்கை அமைப்போடு செல்வமுருகன் கோவில் அமைந்து உள்ளது என அவர் தெரிவித்தார்.






aanmeegamalar.com

# சப்தஸ்தலங்களில் ஒன்று ஆறுபடைவீட்டில் ஒருவீடு: சுவாமிமலை






சுவாமிமலை சுவாமிநாதசுவாமி திருக்கோயில் முருகப் பெருமான் இக் கோயிலில் 'தகப்பன்சுவாமி' எனப் புகழ் பெற்று காணப்படுகிறார். குருவாகி இருந்து அருளியதால் குருமலை என்றும், கந்தாசலம், சிரகிரி, சிவமலை என்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் மற்றொரு பெயர் திரு வேரகம் என அழைக்கப்படுகிறது.

இறைவன் இங்கு சுவாமிநாதனாக இருப்பதால் சுவாமி மலை என்ற பெயர் நிலைபெற்றுவிட்டது. இங்கு சிவன் சுந்தரேசுவரர் தாயார் மீனாட்சி என பெயரில் உள்ளதால், இக்கோயில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் என அழைக்கப்படுகிறது.

முருகனின் அறுபடைவீடுகளில் இதுவும் ஒன்றாகும். தாளமும் சந்தமும் நிறைந்த மெய்ப்பொருட் துறைப் பாடல் கள் இயற்றிப் பல நூல்களைப் படைத்த அருணகிரிநாதர் மற்றும் நக்கீரர் இவ்வூரில் உள்ள முருகனைப் பாடிய பாடல்கள் திருப்புகழில் 4ம் திருமுறையில் உள்ளன.

கட்டுமலையாக அமைந்துள்ள குன்றின் மீது இக் கோயில் அமைந்துள்ளது. ஐந்து நிலையுடன் கூடிய இராஜ கோபுரம் தெற்கு நோக்கியுள்ளது. இத்தலத்தின் தல மரம் நெல்லி மரமாகும். முருகன் சன்னதிக்குச் செல்ல தமிழ் ஆண்டுகள் அறுபதைக் குறிக்கும் 60 படிகளில் ஏறிச்செல்ல வேண்டும்.

மகாமண்டபத்தில் கொடி மரத்தின் அருகே கண்கொடுத்த விநாயகரான நேத்திர விநாயகர் உள்ளார். உள் சுற்றில் தல விநாயகர், வள்ளி தெய்வானையுடன் சுப்பிரமணியர், சரஸ்வதி, நாரதர், வீரபாகு, அகத்தியர், அருணகிரிநாதர் ஆகியோர் சிலைகள் உள்ளன. சுவாமிநாதசுவாமியின் சன்னதிக்கு எதிராக மயிலுக்குப் பதிலாக யானை வாகனம் உள்ளது. இது இந்திரன் அளித்ததாகும். கருவறையில் முருகன் வலது கரத்தில் தண்டம் ஏந்திய படி ஊறு முத்திரையில் நின்ற நிலையில் அருள் பாலிக்கின்றார்.

## கும்பகோணம் சப்தஸ்தானம்

கும்பகோணம் சப்தஸ்தானத்தில் இத் தலமும் ஒன்று.

சப்தஸ்தானங்கள் என அழைக்கப்படும் கும்பகோணம் ஆதி கும்பேசுவரர் கோயில், திருக்கலயநல்லூர் அமிர்தகலசநாதர் கோயில், தாராசுரம் ஆத்மநாதசுவாமி கோயில், திருவலஞ்சுழி கபர்தீஸ்வரர் கோயில், கொட்டையூர் கோடீஸ்வரர் கோயில், மேலக்காவேரி கைலாசநாதர் கோயில் மற்றும் சுவாமிமலை சுந்தரேஸ்வரசுவாமி கோயில் (சுவாமிமலை சுவாமிநாதசுவாமி கோயில்) ஆகிய ஏழு ஊர்களில் நடக்கும் ஏழூர்த் திருவிழாவில் கும்பகோணம் முதலிடத்தைப் பெறுகிறது. இக்கோயிலுக்கு அருகேயுள்ள மற்றொரு முருகன் கோயில் ஏரகரம் கந்தநாதசுவாமி கோயிலாகும். கும்பகோணத்தி லிருந்து சுவாமிமலை செல்லும் பாதையில் மூப்பக்கோயிலிலிருந்து பிரியும் சாலையில், ஆசூர் வாய்க்காலுக்கு மேற்புறம் ஏரகம் சுவாமிநாதசுவாமி கோயில் உள்ளது.








aanmeegamalar.com

# முருகப்பெருமான் கோபம் தணிந்து அமர்ந்த தலம் திருத்தணி

முருகனின் ஆறுபடை வீடுகளில், ஐந்தாம் படை வீடாகத் திகழ்கின்றது. இது இந்தியாவின், வடதமிழ்நாட்டில் உள்ள திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி மலையில் அமைந்துள்ளது.

இது முருகப் பெருமான்வள்ளியை திருமணம் செய்து கொண்ட தலமாகும். ஆண்டின் 365 நாட்களை குறிக்கும் படியாக, 365 படிகளைக் கொண்டது இந்த மலைக்கோயில். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரால் பாடல் பெற்ற தலமாகும். முத்துச்சாமி தீட்சதராலும் பாடப்பட்ட தலம். இக்கோயிலை தணிகை முருகன் கோயில் என்றும் அழைப்பர்.



சங்க காலப் புலவரான நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் இக்கோயில் குறித்த குறிப்புகள் காணப்படுகிறது. இக் கோயில் விசயநகர மன்னர்களாலும், உள்ளூர் நிலக்கிழார்களாலும் பேணப்பட்டு வந்தது.




தேவர்களுக்குத் தீராத துன்பம் கொடுத்து வந்த சூரபத்மனுடன் போர் புரிந்து தேவர்களின் துயரத்தை நீக்கி, வள்ளியை மணந்து கொள்ள வேடர்களுடன் விளையாட்டாகப் போர் புரிந்து, முருகப் பெருமான் கோபம் தணிந்து அமர்ந்த தலம் திருத்தணி ஆகும். ஆகையால் இந்த தலம் தணிகை எனப் பெயர் பெற்றது.

தேவர்கள் பயம் நீங்கிய இடம், முனிவர்கள் காமவெகுளி மயக்கங்களாகிய பகைகள் தணியும் இடம், அடியார்களின் துன்பம், கவலை, பிணி, வறுமை முதலியவற்றைத் தணிக்கும் இடமாதலாலும், திருத்தணி என பெயர் பெற்றது. முருகன் இத்தலத்தில் ஒரு தனி மலையில் கிழக்கு நோக்கி எழுந்தருளி உள்ளார். இம்மலையின் இரு பக்கங்களிலும் மலைத் தொடர்ச்சி பரவியுள்ளது. வடக்கே உள்ள மலை வெண்மையாக இருப்பதால் பச்சரிசி மலையென்றும், தெற்கே உள்ள மலை கருநிறமாக இருப்பதால் புண்ணாக்கு மலை என்றும் அழைக்கப்படுகிறது.

சரவணப் பொய்கை என்ற புகழ்மிக்க குமார தீர்த்தம் என்ற திருக்குளம் மலைஅடிவாரத்தில் உள்ளது. இத்திருக்குளத்தைச் சுற்றி பல மடங்கள் இருப்பதால் இது மடம் கிராமம் என்று அழைக்கப்படுகிறது. குளத்தின் கிழக்குக் கரையிலிருந்து மலையைப் பார்த்தால் வளைவாக இடப் பெற்ற மாலையைப் போல் இருக்கும். அக்காட்சி மிகவும் அழகாகத் திகழும். ஆகையால் அருணகிரிநாதர் இதை அழகு திருத்தணி மலை எனப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இந்த கோயில் தணிகை மலை என்ற மலையில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் ஐந்து அடுக்கு கோபுரம் மற்றும் நான்கு வளாகங்கள் உள்ளன.

இத்தலத்தில் முருகன் வலக் கையில் சக்தி ஹஸ்தம் எனப்படும் வஜ்ரவேலுடன் (இடி போன்ற ஒசை யெழுப்பும் சூலம் போன்ற கருவி) இடக்கையை தொடையில் வைத்து ஞான சக்தி பெற்றவராகக் காட்சி தருகிறார்.

மற்ற கோயில்களில் உள்ளது இந்த முருகனிடம் வேல் கிடையாது. அலங்காரத்தின் போது மட்டுமே தனியே வேல், சேவல் கொடி வைக்கின்றனர். வள்ளி, தெய்வானை இருவருக்கும் தனித் தனி சந்நிதிகள் உள்ளன.

வாழ்க வளமுடன்
MT
மரம்! தரம்!! நிரந்தரம்!!!
மலேசியன் டிம்பர்ஸ்
விற்பனையாளர்கள்: பர்மா தேக்கு, கொலம்பியா தோரு, மலேசியன் கோங்கு (சால்), படாக், வேங்கை அயல்நாட்டு மரங்கள் அனைத்தும் கிடைக்கும்.

75, மெயின்ரோடு,
சங்கிலியாண்டபுரம் திருச்சி-1
Contact: 9442644228, 2303419, 23000797

aanmeegamalar.com

ஆறுபடை முருகன் கோவில் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களே வருக!
பழனிமலை முருகன் அருள் பெறுக



# சிவஸ்ரீ S.பாண்டிகுருக்கள்

ஸ்ரீ கணபதி ஹோமம்,
லட்சுமிஹோமம், திருமணம்,
அனைத்துவிதமான
பரிகார ஹோமங்கள் செய்து தரப்படும்



V.P. காலனி முதல்தெரு,
எமனேஸ்வரம் ஜீவா நகர்
பரமக்குடி
Cell: 6374175186 / 9786674559

ஆன்மிகமலர்.காம் சிறப்பு இதழிலில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெற தொடர்பு கொள்ளவும்
Ph:9994323622 / 9444228203

உறங்காபுளி கருப்பண்ணசாமி துணை.
Ph:77085 95034
அம்மாவின் கை வண்ணத்தில்

# குறள்

## இட்லி தோசை மாவு

தங்கல் இல்ல சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில் மாவு மொத்தமாகவும் சில்லரையாகவும் அரைத்துத் தரப்படும்
தயாபுரம் மானமதுரை அனைத்து கடைகளிலும் கிடைக்கும்

# D.தனபாலன்

பத்திர எழுத்தாளர்



பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில்,
மானாமதுரை 630 606

Bharatgas
Bharat Petroleum
COOK FOOD. SERVE LOVE

எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் திருப்புவனத்தை சுற்றியுள்ள 95 கிராம பொதுமக்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

# அருண் ஏஜன்ஸீஸ்

## பாரத் கேஸ் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்

MAK LUBRICANTS

டீலர் : MAK லூப்ரிகேண்ட்ஸ்
சிவகங்கை மாவட்டம்.

Emergency No:
9443274648

1/86A, பூவந்தி மெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம்.
போன் : 04574-264300, 265710

குறிப்பு : எங்களின் கிளை நிறுவனமாக செயல்படும் வாட்டர் சர்வீஸில், லிப்ட் வசதியில் டூவீலர், கார், காலை முதல் மாலை வரை சிறப்பாக வாட்டர் சர்வீஸ் செய்யப்படும்.




மாதம் இரண்டு முறை வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)”த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

175 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன


23.01.2024
சிறப்பிதழ்

# ஔவையின் அகங்காரத்தை போக்கிய பழமுதிர்சோலை முருகன்






பழமுதிர்சோலை முருகன் கோயில், முருகனின் ஆறுபடை வீடுகளில், ஆறாவது படை வீடாகத் திகழ் கின்றது. முருகன் சிறுவனாய் வந்து ஔவையாரை சோதித்த ஸ்தலமாகும்.

இங்கு தனது மாமனான பெருமாளின் அவதாரமாக திகழும் அழகருக்கு அருகிலேயே முருகன் வசிப்ப தாக கூறப்படுகிறது. அருணகிரிநாதர் இத்திருத்தலம் மீது திருப்புகழ் பாடியுள்ளார். அழகர் கோவில் தீர்த்த மலையில் இக்கோவில் அமைந்துள்ளது.

சோலைமலை என்ற பெயரும் இதற்கு உண்டு. இங்குள்ள முருகன் வெற்றிவேல் முருகன் என்று அழைக்கப்படுகிறார். பழமுதிர்சோலை என்பதற்கு பழங்கள் உதிர்க்கப் பெற்ற சோலை என்று பொருள் எடுத்துக் கொள்ளலாம்.

திருமுருகாற்றுப்படையில் வரும் பழமுதிர்சோலை என்பதற்கு பழம் முற்றிய சோலை என்று நச்சினார்க்கினியர் உரை எழுதியிருக்கிறார். கந்தபுராணத் துதிப்பாடலில், வள்ளியைத் திருமணம் செய்ய விநாயகரை யானையாக வந்து உதவும்படி முருகன் அழைத்த தலம் பழமுதிர்சோலை என்று கூறுகிறார் கச்சியப்ப சிவாச்சாரியார். எனவே ஆறாவது படை வீடாகிய பழமுதிர்சோலை, வள்ளி மலையைக் குறிக்கும் என்று ஒருசாரார் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அருணகிரிநாதர், திருப்புகழில் வள்ளி மலையையும், பழமுதிர்சோலையையும் தனித்தனியே பாடியிருக்கிறார். மேலும் பழமுதிர்சோலையில் இன்றும் காணப் படுகின்ற "நூபுர கங்கை" என்னும் சிலம்பாற்றை பழமுதிர்சோலைத் திருப்புகழில் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அதனால், பழமுதிர்சோலையே முருகனின் ஆறாவது படைவீடாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பழமுதிர்சோலை முருக னுக்கு உகந்த நாளாக வெள்ளிக்கிழமை கருதப்படுகிறது. அன்றைய தினம் முருகனுக்கு தேனும் தினை மாவும் நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது.

ஆறுபடை வீடுகள் ஒவ்வொன்றிலும் திருவிளையாடல் புரிந்த முருகன், இந்தத் தலத்தில், மதுரை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஔவையாரிடம் திருவிளையாடல் புரிந்ததாகச் சொல்கிறார்கள்.

தனது புலமையால் புகழின் உச்சிக்குச் சென்ற அவ்வை யாருக்கு தான் என்ற




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V.நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

அகங்காரம் ஏற்பட்டது. அந்த அகங்காரத்தில் இருந்து அவ்வையை விடுவிக்க எண்ணிய முருகன், அவ்வை மதுரைக்கு காட்டு வழியாக நடந்து செல்லும் வழியில் ஆடு மேய்க்கும் சிறுவனாக தோன்றி வந்தார். அங்கிருந்த ஒரு நாவல் மரத்தின் கிளை ஒன்றில் ஏறி அமர்ந்து கொண்டார். நடந்து வந்த களைப்பால் அந்த மரத்தின் அடியில் வந்து அமர்ந்தார் அவ்வை. நீண்ட தொலைவு பயணம் செய்திருந்ததால் அவருக்குக் களைப்பையும் தந்திருந்தது. வயிறு பசிக்கவும் செய்தது.

அப்போது, தற்செயலாக அந்த மரக்கிளையில் ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் அமர்ந்திருப்பதைக் கண்டார். அந்த மரத்தில் நிறைய நாவல் பழங்கள் இருப்பதையும் பார்த்தார். உடனே அந்தச் சிறுவனிடம், "குழந்தாய்... எனக்குப் பசிக்கிறது. சிறிது நாவல் பழங்களைப் பறித்துத் தர முடியுமா?" என்று கேட்டார். அதற்கு, சிறுவனாக இருந்த முருகப்பெருமான், "சுட்டப் பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? " என்று கேட்டார்.

சிறுவனின் கேள்வி அவ்வைக்குப் புரியவில்லை. பழத்தில் கூட சுட்டப் பழம், சுடாத பழம் என்று இருக்கிறதா? என்று எண்ணிக் கொண்டவர், விளையாட்டாக "சுடாத பழத்தையே கொடுப்பா..." என்று கேட்டுக் கொண்டார்."சுடாத பழம் வேண்டுமா? சரி உலுக்கி விடுகிறேன் சுடாத பழமா பார்த்து எடுத்துக்கோ" என்று கூறி,நாவல் மரத்தின் கிளை ஒன்றை சிறுவனாகிய முருகப் பெருமான் உலுப்ப, நாவல் பழங்கள் அதில் இருந்து கீழே உதிர்ந்து விழுந்தன. அந்தப் பழங்களைப் பொறுக்கிய அவ்வை, அந்தப் பழத்தில் மணல் ஒட்டி இருந்ததால், அவற்றை நீக்கும் பொருட்டு வாயால் ஊதினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவனாகிய முருகப்பெருமான், "என்ன பாட்டி... பழம் சுடுகிறதா?" என்று கேட்டார்.

சிறுவனின் அந்த ஒரு கேள்வியிலேயே அவ்வையின் அகங்காரம் பறந்து போனது. தன்னையே சிந்திக்க வைத்த அந்தச் சிறுவன் நிச்சயம் மானுடனாக இருக்க முடியாது என்று கணித்த அவ்வை, "குழந்தாய்... நீ யாரப்பா? " என்று கேட்டார். மரக்கிளையில் இருந்து கீழே குதித்த சிறுவன் முருகப்பெருமான், தனது சுயஉருவத்தை காண்பித்து அவ்வைக்கு அருளினார். இந்தத் திருவிளையாடல் நடந்த நாவல் மரத்தின் கிளை மரம் இன்றும் சோலைமலை உச்சி யில் காணப்படுகிறது. சோலைமலை முருகன் கோவிலுக்கு சற்று முன்னதாக இந்த மரத்தை இன்றும் நாம் பார்க்கலாம்.

பழமுதிர்சோலைக்கு சற்று உயரத்தில் நூபுர கங்கை என்ற புனித தீர்த்தம் அமைந்துள்ளது. இதற்கு சிலம்பாறு என்ற பெயரும் உண்டு. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்த தீர்த்தத் தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக கூறுகிறார்கள். மலை உச்சியில் இந்த தீர்த்தத் தண்ணீர் ஒரிடத்தில் விழும் வகையில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த இடத்தில் ராக்காயி அம்மன் கோவில் அமைந்துள்ளது. இந்த அம்மனை வழிபடச் செல்பவர்கள், நூபுர கங்கை விழும் இடத்தில் புனித நீராடிச் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். இந்தத் தீர்த்தத் தண்ணீரில்தான் புகழ் பெற்ற அழகர் கோவில் பிரசாதமான சம்பா தோசை தயார் செய்யப்படுகிறது. கந்த சஷ்டி விழா தைப்பூசம், வைகாசி விசாகம், கிருத்திகை ஆகிய நாட்களிலும் சிறப்பு பூசை, அபிஷேகங்களும் நடைபெறுகின்றன.







We are Responsible. Visit us for Safe Food.

akkarai Responsible Snacking

akkarai Responsible Snacking akkarai express

LET'S THINNAI Relax & Recharge

THINNAI's BUNLY BUNK Steamed Bun with Filling

The ICECREAM VAN Homely IceCream Estd. 2018

ONDRAHA Wholesome Selling

CHOCOKICK Cafe Hit Pause! Get together!

Check out for locations & timings: www.indianfoods.in | Contact: Ms Rani | 9791900447 | div3_ifpl@yahoo.co.in

INDIAN FOODS INNOVATIONS Simple & Soulful

MD COMMUNITY KITCHEN Simple & Soulful

aanmeegamalar.com







தைப்பூச விழாவிற்கு
வருகை தரும் பக்தர்களை
வரவேற்கிறோம்




இறைபணியில் **P.முருகேசன்** உரிமையாளர்

SWAMY VILAS PALANI
JAVADHU VASANAI VIBOOTHI

# சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588

aanmeegamalar.com

# மனக்கவலைகளைத் தீர்த்துவைக்கும் ஸ்ரீமயூரநாதமுருகன் ஸ்ரீபாம்பன் சுவாமி கோவில்







சிவகங்கை மாவட்டம் மானா மதுரை தாயமங்கலம் ரோட்டில் அலங்காரகுள கரையில் உள்ள மயிரநாதபுரத்தில் உள்ளது ஸ்ரீ மயூரநாத முருகன் பாம்பன் ஸ்ரீமத் குமாரகுருதாசசுவாமி கோவில் உள்ளது. பிரசித்தி பெற்ற இக் கோவிலில் மக்களின்

மனக் குறைகளை போக்கும் மயூரநாதரா முருகன் அருள் பாலிக்கிறார். பாம்பன் ஸ்ரீமத் குமார குருதாசசுவாமிக்கும் தனி சன்னதி உள்ளது.

இங்கு ஆண்டு தோறும் தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், பாம்பன்சுவாமி குருபூஜை மற்றும் வேல்பூஜை விழாக்கள் நடைபெறுகிறது. இதுதவிர பௌர்ணமி கிருத்திகை பூஜைகள் நடைபெறுகிறது. பக்தர்களின் மனக்கவலை தீரும் முருகன் ஸ்தலமாக உள்ளது. தற்போது20 வருடங்கள் பிறகு மகாமண்டபம், அன்னதான கூடம் மற்றும் கோவில் திருப்பணிகள் தொடங்கப்பட்டு உள்ளது.

வரும் 25 ந்தேதி தைபூச விழாவில் ஸ்ரீமயூரநாதமுருகன் உற்சவர் மானாமதுரை ஆனந்த வல்லி அம்மன் சோமநாதர் கோவிலில் இருந்து வீதிஉலா வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. கோவில் திருப்பணி மற்றும் விழா ஏற்பாடுகளை ஸ்ரீமத் பாம்பன் சுவா அறக்கட்டளை நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.






# உடல் வசீகரத்தை கொடுக்கும் கந்த அலங்காரம்

இறைவனை நகை, அணிகலன்கள் போன்றவற்றை பயன்படுத்தி அலங்கரிப்பார்கள்.

இது கடவுள் மீது பக்தர்களுக்கு உள்ள அதீத பக்தியின் வெளிப்பாடாகும்.

இதிலும் குறிப்பாக முருகன், பெருமாள் போன்றவர்கள் அலங்காரப் பிரியர்கள், இவர்களை வித விதமாக பக்தர்கள் அலங்கரிப் பார்கள்.

இதைப்போன்று வார்த்தையால் இறைவனை அலங்கரிக்கும் பாடல்களும் இந்துமதத்தில் அதிகம் உள்ளது. இதில் முருகனுக்கு பாடப்படும் "கந்த அலங்காரம்" மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

அலங்காரத்தால் எப்படி இறைவனை வர்ணிப்போமோ, அதேபோல வார்த்தையால் வர்ணிப்பது மிகவும் சிறப்பு. இதன் உட்பொருள் மீண்டும் மெய்ஞானத்தைதான் குறிக்கிறது.

இந்த கந்தன் அலங்காரத்தை, புற வாழ்க்கைக்கு பயன் படுத்தலாம். புற வாழ்க்கைக்கும், மேனி அழகிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க கூடியவர்கள் அது தொடர்பான துறையிலே இருப்பவர்கள் உடல் வசீகரமாக இருக்க நினைப்பவர்கள் அனைவரும் இந்த கந்த அலங்காரத்தை ஓதி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.


ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை
மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்
பீனாஸ் பத்திர எழுத்தகம்
பத்திர எழுத்தர்



Prop.N.P.வேல்முருகன் B.Com
State Document Writer
செல்: 99526 39497
95851 88741


வாழ்க வளமுடன்
அனைத்து ஆன்மிக சுற்றுலா செல்வதற்கும் உங்கள்
ஜீவிகா டிராவல்ஸ்
அன்புடன் அழைக்கும்
K.தவமணி



JEEVIKA TRAVELS
ETIOS CAR, INNOVA CAR AVAILABLE HERE



9442758530
9842963531


பழனி மலைக்கோவில் தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தகோடி மக்களே
வருக! வருக!!
ஸ்ரீதிருமுருகன் சூப்பர் மார்ட்
வீட்டிற்கு தேவையான அனைத்து பொருள்களும் வாங்க சிறந்த ஸ்தாபனம்
7, குண்டுராயர் வீதி,
தேவர் சிலை அருகில்,
மானாமதுரை, செல்:9943436363


aanmeegamalar.com





# சித்தர்கள் பிரதிஷ்டை செய்த தண்டாயுதபாணி



முருகனின் முதல்படை ஸ்தலம் திருப் பரங்குன்றம் அருகே உள்ளது புஜண்டர்மலை எனப்படும் திருகூடல்மலை உள்ளது.

இந்த மலையில் மானாமதுரை அருகே கட்டிகுளத்தில் அவதரித்த தவதிரு சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி பிரதிஷ்டை செய்து வழிபட்ட நவநீதபெருமாள், ஸ்ரீ பால தண்டாயுதபாணி சுவாமி கோவில் உள்ளது.

தினமும் இங்கிருந்து ஸ்ரீசோமப்பா சுவாமி, ஸ்ரீ மாயாண்டி சுவாமி ஆகியோர் ஸ்ரீமீனாட்சிஅம்மன் யானைமலை யோக நரசிங்க பெருமாள் திருப்பரங்குன்றம் முருகனை தரிசித்து தங்களின் தவவலி மையால் பக்தர்களுக்கு பல்வேறு அற்புதங் களைபுரிந்து உள்ளனர்.


இங்கு சித்தர்கள் தவபுரிந்த குகை மற்றும் சித்தர்கள் ஜீவசமாதி கோவில்கள் உள்ளது.

இவை அனைத்தும் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி குருநாதர் சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமி நாமத்தில் ராமலிங்கம் விலாசம் என்ற பெயரில் திருகூடல்மலையில் கோவிலும் அடிவாரத்தில் சித்தர்கள் ஜீவ சமாதி கோவில் ஆஞ்சநேயர் பீடம், பசுமடம் உள்ளது.

மலையோறிசெல்ல படி, சாலை வசதி உள்ளது. தினமும் அன்னதானம் மற்றும் அமாவாசை பௌர்ணமி நாட்களில் சிறப்பு வழிபாடு பூஜை நடைபெறுகிறது.

திருகூடல்மலையில் சென்று சித்தர்கள் ஜீவசமாதி கோவிலில் வழிபாடு செய்து வரும் பக்த்தர்களுக்கு தங்களது வாழ்வில் திருப்பம் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் ஆலயதகவல் பற்றி அறிய செல்9842124841.

ஸ்ரீ லெட்சுமி ஆட்டோ ஸ்பேர்ஸ்

Hero MINDA BOSCH MOTUL HONDA YAMAHA BAJAJ TVS

அனைத்து டூவீலர் வாகனங்களுக்கும் உதிரி பாகங்கள் குறைந்த விலையில் கிடைக்கும் சேல்ஸ் & சர்வீஸ்

சாஸ்தா நகர், சிவகங்கை மெயின்ரோடு மானாமதுரை-630 666

புதிய கிளை: தாகியார்நகர், மானாமதுரை

96989 55068 /99521 24373

P.சரவணன்

B.Sc.,DT.,Ed.,

LIC முகவர்

ஸ்ரீ பராசரர் ஜோதிட நிலையம்

சிவகங்கை ரோடு, மானாமதுரை.

செல்:97919 05666



ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை



ஆறுபடை முருகன் கோவில்களில் நடைபெறும் தைப்புச
விழா காண வருகை தரும் பக்தர்களை வருக வருக
பழனிமலை முருகன் அருள் பெருக...



**வாசுதேவா என்றால் வளம் பொங்கும்!**
**வாசுதேவன் பாத்திரத்தில் ராசி பொங்கும்!!**



# வாசுதேவன் பாத்திரக்கடை

**முகவையின் மபெரும் பாத்திரக்கடை**



**கல்யாண சீர்வரிசைக்கு தேவையான பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர், கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும் வாங்க கைராசியான நிறுவனம்**

**12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம்**

**போன்: 04567220 209, செல்: 88074 08807**

aanmeegamalar.com

# முதன்முதலில் பழனி பாதயாத்திரை

# உருவான வரலாறும் துவக்கப்பட்ட கோவிலும்

பழனி தைப்பூசம் உலக அளவில் பிரபலமான விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது, இந்த தைப்பூச தினத்தில் முருகனை சந்திக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பலநாட்களுக்கு முன்பிலிருந்தே பக்தர்கள் பாதயாத்தையாக பழனியை நோக்கி நடக்க ஆரம்பிப்பார்கள்.

இவ்வாறு நடந்து சென்றே முருகப்பெருமானை தரிசிக்கும் பழக்கம் ஆதி காலத்தில் இல்லாமல் இருந்தாலும், குறிப்பாக 500 ஆண்டுகளுக்கு முன்புதான் இந்த நடைபயண தரிசனம் தோன்றியதாக கூறப்படுகிறது.

ஒவ்வொரு கால மாற்றத்தின் போதும், இந்து மதத்தில் புதிய புதிய பக்தி பழக்கங்கள் தோன்றும் என்பதற்கு இந்த பாதயாத்திரையை முன் உதாரண மாகும்.

சரி இந்த நடைபயணம் எவ்வாறு தோன்றியது, நடைபயணம் உருவான இடம் எது என்று விரிவாக பார்ப்போம்.

போக்குவரத்து வளர்ச்சியடையாத காலத்திலேயே, தொலைதூர வணிகங்களை தைரியமாகப் மேற்கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியார் எனும் நகரத்தார் சமுகத்தினர்.

சுமார் 450 ஆண்டுகளுக்கு முன், இச்சமுதாயத்தைச் சேர்ந்த வணிகர் ஒருவர் உப்பு வியாபாரம் செய்து வந்தார். ஒரு கட்டத்தில் அவரது வாணிபம் நலிவடைந்தது. இதனால் பழனி முருகனிடம் தன் வாணிபம் பெருக செட்டியார் மனம் உருகி முறையிட்டார். வாணிபம் நல்லபடியாக நடக்கும் பட்சத்தில் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியை முருகனுக்கே அர்ப்பணிப்பதாக மனத்திலே பிரார்த்தனை செய்து கொண்டார்.

பழனி முருகன் அவருக்கு அருள் புரிந்தார். உப்பு வாணிபம் மேன்மேலும் வளரத் தொடங்கியது. செட்டியாரும் தான் வேண்டிக் கொண்டபடி முருகனுக்காக ஒதுக்கிய வருமானப் பங்கு பணத்தை ஆண்டு தோறும் தன் ஊரிலிருந்து பழனிக்குப் பாதயாத்திரையாகவே சென்று கொடுத்தார். முருகனின் கருணை வெள்ளத்தில் அழுந்திய அவர் அடுத்து வந்த ஆண்டுகளில் நோன்பிருந்து ஒரு குழுவாக நடைப்பயணம் வந்து ஆண்டு தோறும் வழிபாடு செய்யும் வழக்கத்தை மேற்கொண்டார்.

இதை அறிந்த மற்ற நகரத்தார்களும் ஆண்டு தோறும் தைப்பூசத் திருநாளில் முருகனை தரிசிப்பதகாக பல குழுக்களாகப் பாதயாத்திரை மேற்கொண்டு பழனி நோக்கி வந்தனர்.

இப்படித்தான் பழனி பாதயாத்திரை பிரபலமாகியது. ஒரு குழு பல குழுக்களாகி பல குழுக்கள் நூறாகி, நூறு



குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதப் பெருமான்


காயத்ரி ஆவண தயாரிப்பு மையம்
ந.சிவராமகிருஷ்ணன்
பத்திர எழுத்தர்
அரசு உரிமம் எண்
A437/ TRP/1993
Cell : 98422 57449 / 99947 82295
7/22, கருணாநிதி நகர், சௌரிபாளையம், கோயமுத்தூர் - 641 028

ஆயிரங்களாகி இன்று லட்சக்கணக்கான மக்கள் தைப்பூசத் திருநாள் விழாவிற்கு செட்டிநாட்டுப் பகுதிகளிலிருந்து பழனி வருகின்றனர்.

இச்சமூகத்தினர் அனைவரும் தங்கள் ஊர்களிலிருந்து நடந்து குன்றக்குடி வந்தடைந்து அங்கு ஒன்று கூடி குன்றக்குடி முருகப்பெருமான் ரத்தினவேல் துணைக்கு வர காவடிகளுடன் தங்கள் குருவான சாமியாடிச் செட்டியாரின் தலைமையில் பாதயாத்திரை மேற்கொள்கின்றனர்.

இதைப்போன்றே மற்ற சமுகத்தைச் சேர்ந்த முருக பக்தர்களும் ஒன்று சேர்ந்து தைபூசத்தில் நடைபயணத்தை துவங்கினார்கள்.

நாளடைவில் பல்வேறு பிரிவினர்களும் காவடியெடுத்துப் பழனிக்கு நடந்து வருவர். வழியில் நாட்டார் காவடிகள் என்றும் நகரத்தார் காவடிகள் என்றும் நடைப்பயணத்தில் வரும் அனைத்துக் காவடிகளும் ஒன்று சேர்ந்து பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் செல்லும் காட்சிகள் மிகவும் அற்புதமானவை.

நாள் தோறும் அன்றாடப் பயண முடிவில் ஒரிடத்தில் ஒன்றாகக் காவடிகளை இறக்கி பூஜைகள் செய்து நடைபயணம் மேற்கொள்ளும் பக்தர்கள், பசி, தாகம் தீர்த்து வைத்து மறுபடியும் பயணம் மேற்கொள்வர். இவ்வாறு ஒரு வார காலம், பசி, தாகம், தூக்கம், உடல் வலி, கால்கள் வலி, ஊர், உறவு, வீடு, வாசல் எல்லாவற்றையும் மறந்து ஒரே சிந்தனையுடன் பழனி ஆண்டவனையே நெஞ்சில் வைத்து பாடியும் ஆடியும் நடந்து செல்வார்கள்.

பழனியை அடைந்ததும் காவடிகளையும் தங்கள் மனபாரங்களையும் ஒன்றாக முருகனிடம் இறக்கி வைத்துப் பூஜைகளும் நேர்த்திக் கடன்களும் செய்து முடிப்பார்கள். அங்கேயே ஓரிரு நாட்கள் தங்கி விரதமிருந்து இறைவனிடம் மனம் உருகி வேண்டுதல்கள் செய்து தைப்பூசத் தேரோட்டம் காண்பார்கள்.

இன்று உலகம் முழுவதிலும் இருந்து வரும் பாத யாத்திரையாளர்கள் பெருகிப் பெருகி ஆண்டு தோறும் தைப்பூசத் திருநாளில் பழனியில் வந்து கூடும் பக்தர்கள் கூட்டம் அளவிட முடியாததாகி விட்டது.

தமிழகத்தின் பல பாகங்களில் இருந்தும் ஒரு மாதத்திற்கு முன்பே விரதமிருந்து பழனி நோக்கி பக்தர்கள் நடக்கத் தொடங்கி விடுவர். தமிழகத்தின் வேறு எந்த கோவிலிலும் பாதயாத்திரைப் பக்தர்கள் இந்த அளவுக்கு கூடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது தைப்பூசத்திருவிழா உலக அளவில் மிகப் பிரபலமாவதுடன், உலகின் பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் தமிழகம் வந்து நடைபயணம் செய்யும் அளவிற்கு தைப்பூச நடைபயண பக்தி மிகப் பெரிய அபார வளர்ச்சி அடைந்துள்ளது.

பழனிக்குவரமுடியாத சூழ்நிலையில் உள்ள பல வெளிநாட்டினர், அவர்களது ஊரில் உள்ள முருகன் கோவில் களுக்கு நடைபயணம் மேற்கெண்டு, தைப்பூச தினத்தில் காவடியெடுத்து வழிபட்டுவருகின்றனர்.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தைப்பூசத்தை அரசு விழாவாகவே கொண்டாடிவருகின்றனர்.

தீராத தொழில் நஷ்டம், திருமணம் கைகூடாதவர்கள், குழந்தைபாக்கியம் இல்லாதவர், தொடர் மன சஞ்சலத்தில் ஆட்படும் அனைவரும் தைப்பூசத்திற்கு விரதமிருந்து பழனிக்கு பாதயாத்திரை சென்றுவந்தால் பிரச்சனைகளிலிருந்து விடுபெறலாம்.






# கலிதோஷம் தீர்த்துவைக்கும் வேம்பத்தூர் கலிதீர்த்த அய்யனார்



சங்க காலத்திற்க்கு முன்னர் வேம்பி என்றும் சங்க காலத்தில் வேம்பற்றூர் என்றும் பரசுவதத்தில் தமிழிழ் சேம்மா நகர் என்றும் பல புலர்கள் நிறைந்து இருந்த நகரம் இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி கையேட்டில் வேம்பத்தூர் என்று உள்ளது. கோவில் கல்வெட்டில் பழம் பெருமை வாய்ந்த ஊராக வேம்பத்தூர் உள்ளது.

மதுரையில் இருந்து தென்கிழக்கே 35 கிலோ மீட்டர் அருகிலும் சிவகங்கை நகரில் இருந்து 13 கி.மீ தூரமும் உள்ளது.

இவ்வூர் எல்லையில் காவல் தெய்வமாக பந்தி பரிபால தேவதைகளுடன் ஸ்ரீ பூரண புஷ்கலாம்பாள் சமேத ராய் அரிகர புத்திர சாமியாக கலிதீர்த்த அய்யனார் ரூபமாக அமர்ந்து அருள் பாலித்து வருகிறார் வெண் குதிரையில்

மேல் ஏறி ஊரை சுற்றிலும் காவல் காத்து வருகிறார்.

முன்னொரு காலத்தில் வேம்பற்றூர் கிராமத்தின் வளமையும் செழிமையும் கண்டு மானாமதுரை (வானரவீர மதுரை | ஆண்ட மன்னன் ஊரின் மேல் ஆசை கொண்டு அவன் மைத்துனர் முண்ட ராமன் மூலமாக இங்குள்ள அந்தணர்களை விரட்டி ஊரை கைபற்றினார் இவ்வூரில் வாழ்ந்த அந்தணர்கள் பல ஊர்களில் வாழ்ந்து வந்தனர்.

முன்பு செல்லி நகர் தற்போது பனையூர் என்று அழைக்கப் படும் ஊரில் வாழ்ந்து வந்த வேத நாராயணன் என்ற இரண்டு அந்தணர்கள் வேம்பற்றூர் (தனது சொந்த ஊர் மீது பற்றின் காரணமாக அவ்வூரை எப்படியேனும் தாங்கள் அடைய வேண்டும் என்று விருப்பத்தின் காரணமாக அந்த அந்த அந்தணர்கள் மந்திர தந்திரத்திலும் மற்றும் வடமொழி தமிழ் இரண்டிலும் நன்கு அறிந்தவர்களாகவும் தெய்வ பக்தி மிக்கவராகவும் இருந்தனர்.

வேம்பதூரில் அருகில் உள்ள நிறைகுலத்து அய்யனாரை வேண்டிய போது நீ தற்போது ராய வேலூரில் உள்ள கிருஷ்ண ராஜர் என்னும் மன்னனை என்று கூற இவர் ராய வேலூர் சென்று மன்னரை சந்தித்த போது மகாராணிக்கு ராஜபிளவை வந்துள்ளது நங்கள் பல வைத்தியரிடம் காண்பித்தோம் எதுவும் சரி வரவில்லை என்று மன்னன் கூற, இவ்விரு அந்தணர்களும் அய்யனை நினைத்து நங்கள் அந்த நோயினை குனபடுத்துகிறோம் என்று கூற மன்னனும் அதற்க்கு சம்மதிக்க இவ்விரு அந்தணர்கள் முயற்சியால் அந்த நோய் குணமாகியது.

மன்னன் தங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்க எங்கள் முன்னோர்களால் தானமாக பெறப்பட்ட பாண்டிய நாட்டில் உள்ள மதுரைக்கு அருகில் உள்ள வேம்பத்தூரை மீட்டுத் தர வேண்டும் என்று மன்னனிடம் வேண்ட மன்னனும் தன் படைகளை அனுப்பியதோடு தளபதிகளாக அமைத்து உதவினார்.

அப்ப உதவும் முன்னர் அந்த இருவரும் ஹரிஹர புத்திர சாஸ்தாவை வேண்டி செய்கிறோம் எங்கள் முன்னர் வெண் குதிரையில் ஏறி எங்களுக்கு காவலாக வர வேண்டும் என்று அந்த அந்தணர்கள் வேண்ட அய்யனும் கலி தீர்த்த அய்யன் ரூபமாக அவர்கள் முன்னே சென்று வேம்பத்தாரை சென்றடைந்து மன்னனின் மைத்துனராகிய முண்ட ராமனிடம் போரிட்டு வேம்பத்தாரை மீட்டனர் அதில் ஒரு அந்தணராகிய வேத மூர்த்தியார் என்பவர் சூழ்ச்சியின் காரணமாக இறந்து விட அவர் ஜீவ சமாதியாக வேம்பத்தூரில் உள்ளார்.

மற்றொரு அந்தணர் மூலமாக தனக்கு முன்னால் வந்த கலிதீர்த்த அய்யனை வேம்பத்தூர் முன்னர் காவல்தெய்வமாக இருந்து காக்க வேண்டும் என்று வேண்டியதின் பெயரில் அவர் மூலமாக கோவில் எழுப்பி இவ்வூருக்கு கிருஷ்ணராயபுரம் என்று பெயரும் வைத்தார்.

அன்று முதல் இன்று வரை கலிதீர்த்த அய்யனராக பந்தி பரிபால தேவதைகளுடன் பூரண புஷ்கலாம்பாளாக சமேதராய் நின்று அருள் பாலித்து வருகிறார் இக் கோவிலுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் கலியினால் ஏற்படும் தோஷங்கள் அனைத்தையும் நீக்கி பக்தர்கள் வேண்டும் நல்செயல்களையும் முற்பிறவியில் செய்த தீவினை அனைத் தையும் போக்கும் வல்லவர்

இவரைப்பற்றி வேம்பத்தூரில் வாழ்ந்த சங்கர நாராயணர் எனும் புலவர் இவரையே தலைவராக கொண்டு மதுரையில் உள்ள சிவனை பற்றியும் மதுரை பற்றியும் தான் பாடிய மதுரை கோவை எனும் ஊரில் கடவுள் வாழ்த்து பாடலாக இவரை பற்றி பாடியுள்ளார்

பாடல் பின்வருமாறு:

சிறப்புப்பாயிரம்

தேவுக் கரசு திருவால வாய்க்கொரு தீபமென்னுங்
(சொற கோவுக் கருந்தமிழ்க் கோவைசெய் தான்
கொண்டெழுமொரு காவிற் படிதடஞ் சூழ்நிம்பை
காவலன் கற்றுணர்ந்தோர் நாவுக் கினியனன் சொற்பாடற்
சங்கர நாராயணனே (நிம்பை என்பது வேம்பத்தூர்)

இக்கோவில் சிதிலமடைந்த காரணத்தால் வேம்பத்தூர் கிராம பொதுமக்கள் அத்தனை பேரின் முயற்சியோடு தற்போது புதுக்கோவில் ஒன்று நிர்மாணிக்கப் பட உள்ளது மெய் அன்பர்கள் மற்றும் தர்ம சாஸ்தா மீது பற்றுக் கொண்ட அன்பர்கள் உதவி செய்து இக்கோவிலை கட்டுவதற்கு தங்களால் இயன்ற உதவியை செய்யுமாறு வேம்பத்தூர் கிராம பொதுமக்கள், காந்தி நகர் காலணி பொதுமக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

கோவில் திருப்பணி உதவிட (தொடர்புக்கு) 9790325083



# தமிழகத்தில் குழந்தைகள் கோவிலான ஸ்ரீ பாலாதிரிபுரசுந்தரி சமஸ்தான கோவில்





பராசக்தி குழந்தை பருவதிரு மேனியாக திகழும் வாலைஎனும் ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி அன்னையே நவகோடி சித்தர்களின் தலைவி யாகவும், ஞானஸ்கந்தர் முருகன் கை வேலாக திகழ்வது ஸ்ரீவாலை பராசக்தியான ஸ்ரீபாலாம்பிகையே இவளுக்கு தமிழகத்திலேயே முதன்மை திருத்தலமாக திகழ்வது சென்னை, செங்கல்பட்டு அருகில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபாலா திரிபுர சுந்தரி சமஸ்தானமாகும்.

இங்கு ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி மூலவ உற்சவ திருமேனியாக, அரண்மனை அமைப்பில் ஆலய மும், அறிய கணபதி ரூபமாக ஸ்ரீஉச்சிஷ்ட கணபதி, கொடிமரம், ஸ்வர்ண விமானம், காமதேனு எதிர் இருக்க வீற்றிருக்கும் ஐம்பது ஆண்டு களுக்கு மேற்பட்ட ஸ்ரீபாலா ஆலயமாகும். இத்தலத்தில் அம்பாள் குழந்தையாக குமரி, தாயாக மூன்று திரிபுர சுந்தரி அம்பாளை தரிசிக்கலாம்.

பாலையின் மூல ரூபமான ஸ்ரீமத் லலிதா மகா திரிபுர சுந்தரி, 16 திதிகளை படியாக கொண்ட மாடி சந்நிதியில், 9அடி உயரத்தில் நின்ற திருக்கோலத்தில் 69 வகைமூலிகை கள் கொண்டு முழுக்க முழுக்க மூலிகை இலை, பட்டை, வேர், சாறுகள், மரப்பிசின், பாலசிங்கம் சாளக்கிராமம் போன்ற அனைத்தும் இயற்கை பொருட்களை கொண்டு செய்யப்பட்ட ஔஷத லலிதாம்பிகையை கண்ணார தரி சிக்க சிறப்பு அவளது அருள் அழகை வார்த்தையால் விவ ரிக்க இயலாது.

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத ஸ்ரீமத் ஔஷத லலிதா திருமேனியை முருகனை ஆத்மார்த்த குருவாக கொண்ட ஸ்ரீவித்யா உபாசகர், சிற்ப ஆகம செம்மல், சிவஸ்ரீ இராஜசேகர இளம்பூரண சிவம் அவர்கள் இந்த மூலிகை அம்பாளை எட்டு ஆண்டுகளாக குருமண்டல யாகம் செய்து வளர்பிறை காலத்தில் தன் கடின உழைப்பால் உலகம் உய்ய இந்த மருந்து திருமேனி அம்பாளை செய்துள் உள்ளார்கள்.

இவளுக்கு அபிஷேகம் கிடையாது, பாத பூஜை மட்டுமே, ஸ்ரீசக்ர மகாராணி லலிதை இருபுறமும் ஸ்ரீமகா வாராகி, ஸ்ரீஇராஜ மாதங்கி அஷ்ட புஜங்களுடன் வீற்றிருக்கின்றனர், வேறு தலத்தில் இல்லாத சிறப்பாக இத்தலத்தில் வருடத்திற்கு நான்கு நவராத்திரி முறை நவராத்திரி நடைபெறுகிறது.

அதிலும் புரட்டாசி சாராதா நவராத்திரியில், குலசேகரன் பட்டினம் பிறகு செம்பை வாலை ஸ்ரீபாலாவிற்கு கொடியேறி பிரம்மோற்சவம் 15விழாவும், பங்குனி மாத அமாவாசை முதல் வசந்த கால லலிதா மகா நவராத்திரி கொடியேற்றம், ஸ்ரீகாமேஸ்வரர் லலிதா திருக்கல்யாணம், ஸ்ரீலலிதா பட்டாபிஷேகம், ஸ்ரீபாலா லாலி உற்சவம், ராம நவமி திதியில் பண்டாசூரசம்ஹாரநிகழ்ச்சி முருகன் செய்வது போல் ஸ்ரீபாலா, ஸ்ரீவாராகி, மாதங்கி, ஸ்ரீலலிதா எழுந்தருளி சம்ஹாரநிகழ்ச்சியும், சாந்தி அபிஷேகம், புஷ்பாஞ்சலி, தீர்த்தவாரி என பௌர்ணமி திதி வரை 15நாள் பெருவிழாவாக கொண்டாடப்படுகிற தமிழகத்தின் ஒரே தலமாகும்.

சிவன் நெற்றிக்கண்ணில் இருந்து எப்படி முருகன் தோன்றினாறோ அதுபோல் பார்வதியிலிருந்து தோன்றியவள் ஸ்ரீபாலா திரிபுரசுந்தரி. லலிதையின் பிராண சக்தி, குட்டி லலிதா என செல்லமாக போற்றப்படுபவள், முருகனின் சஷ்டி கவத்தில் ஸ்ரீபாலாவின் மூலமந்திரமான ஐயும், கிலியும், அதனுடன் சௌவும் என்ற பாலா மூலமந்திரம் இடம்பெற்றுள்ளது.

சித்தர்களின் முதன்மை தெய்வமாக போற்றப்படுபவள் ஸ்ரீவாலை எனும் பாலாவும், முருகப் பெருமானும் ஆகும், இவ்விரு தெய்வங்களுக்கும் மாவிளக்கு தீபம் ஏற்றி வழிபடும் முறையும் ஆதி முதலே உள்ளது, முருகன் கவரவே ஸ்ரீபாலாசக்திதான்.

அகத்தியர், கொங்ணர், போகர், திருமூலர், கருவூரார் போன்ற சித்தர் யோகிகளுக்கு குண்ட லினியை எழுப்பி நம்மை பரசிவமான சிவனிடம் சேர்ப்பவள், முருகனுக்கும், வாலைக்கும் அணு அளவும் பேதம் இல்லை.

இத்தலத்தில் முருகனுக்குரிய கந்தர்சஷ்டி விழா, தைப்பூசம், வைகாசி விசாகம் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள குழந்தை வேலன் மற்றும் ஸ்ரீபால தண்டாயுதபாணிக்கு சிறப்பு ஆராதனை நடைபெறும்.

இத்தலத்தில் மயிலை கற்பகாம்பாளிடம் பிரியமான ஆறுமுகம் என்ற அடியாரின் கனவில் அம்பாள் குழந்தையாக பல முறை காட்சியளித்தால் போளூர் விடோபா சுவாமிகள், காஞ்சி பெரியவர், சேஷாத்ரி சுவாமிகள், திருப்போரூர் சிதம்பரசுவாமிகள், கிருபானந்த வாரியார் சுவாமிகளின் அருளாசி அனுபவத்தால் 1979ல் உருவான ஸ்ரீபாலா பீடம் வீட்டு பூஜையறை வழிபாட்டிலிருந்து சிறிது சிறிதாக வளர்ந்து இன்று ஸ்ரீபாலா சமஸ்தானம், ஔஷத லலிதா தர்பார் ஆலயமாக திகழ்கிறது. செங்கல்பட்டு திருப்போரூர் சாலை, (ஒ.எம்.ஆர்.அருகில்) செம்பாக்கம் கிராமத்தில் ஆலயம் உள்ளது. ஆலய தொடர்பு எண்: 97899 21151.

aanmeegamalar.com

# பழனி முருகனின் அலங்காரமும் நோய் தீர்க்கும் தேவரகசியமும்

கலியுகத்தில், நாம் செய்த கர்மவினைகளை குறைக்கக் கூடிய மாபெரும்சக்தி முருகப் பெருமானுக்கு உள்ளது.

பழனி மலைக்கு சென்று முருகனை தரிசனம் செய்தால் நம்முடைய கர்மவினைகள் குறையும். கர்ம வினைகளால் ஏற்படும் நம்முடைய பிரச்சனைகள் தீர பழனி முருகனை எப்படி வழிபாடு, பூஜை செய்வது என்ற தேவ ரகசியம் தெரியுமா?

வாழ்வில் தடை போட்டி பொறமை கஷ்டம் போன்ற பல பிரச்சனைகள் விலக ஆண்டிகோலத் தில் இருக்கும் பழனி யாண்டவர் முருகனை தரிசனம் செய்வதால் நன்மைகள் பல உண்டாகும்

பழனி முருகப்பெருமானை ஆண்டி கோலத்தில் இருக்கும்போது தரிசனம் செய்தால் நம்மை ஆண்டியாக ஆக்கி விடுவார் என்றும், ராஜ அலங்காரத்தில் இருக்கும் போதும் மட்டுமே தரிசனம் செய்தால் ராஜ வாழ்க்கை கிடைக்கும் என்றும் பலர் சொல்ல கேட் டிருப்பீர்கள்.

ஆனால் உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தீராத துயரத்தை அனுபவித்து வந்தால், அதிகப்படியானதடை கள் உங்களுடைய வாழ்க்கையில் இருந்தால் நீங்கள் பழனி முருகனை தண்டாயுதபாணி கோலத்தில் அதாவது ஆண்டி அலங்காரத் தில் தரிசிப்பது தான் சிறந்தது

முற்றும் துறந்த தவ நிலை, அதாவது அலங்காரம் இல்லா மல் ஆண்டிக் கோலத் தில் பார்க்கும்போது நமக்குள் ஒரு மெய் ஞானம் உண்டாகும் என்பதற்காக. பெரிய ஞானிகளெல்லாம் அந்தக்கோலத்தைக் காண்பதற்காகத்தான் துடிப்பார்கள்.

முற்றும் துறந்தவர்கள், குடும்பத்தில் பல நிலைகளைக் கடந்தவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தை விரும்பிப் பார்ப்பார்கள்.

ஜோதிடப்படி பார்க்கும் போது செவ்வாய் கிரகம் முருகனுக்கு வருகிறார். அதிலும் இந்த பழனி முருகன் ஞானகாரகனாக இருக்கிறார். மேலும், இந்தச் செவ்வாயுடன் குருவும் கலக்கிறார். வீரம், தைரியம் இதற்கெல்லாம் உரியது செவ்வாய்.

இந்த வீரமும், தைரியமும் இருந்ததால்தான் எல்லோ ரையும், எல்லா வற்றையும் உதறித் தள்ளி விட்டு அவர் இங்கு வந்து நிற்க முடிந்தது.

ஆனால் நின்ற உடனேயே அங்கு குரு வந்து விடுகிறார். செவ்வாயாக வீராவேசத்துடன் கிளம்பி குருவாக நிற்கிறார்.

வழக்குகளெல்லாம் நடக்கிறது, தீராத நோய்க ளெல்லாம் இருக்கிறது போன்ற பிரச்சனைகளுக்கு அலங்காரம் இல்லாத முருகனை வணங்குவதே நன்று. 20 வருடமா வாதாடிக் கொண்டிருக்கிறேன். தீர்ப்பு தள்ளி தள்ளிப் போகிறது என்றால் அதற்கு அலங்காரம் இல்லாத ஆண்டிக் கோல முருகன் வழிகாட்டுவார்.

தீராத நோய், மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள், அவ்வளவுதான் என்ற நிலையில் அதற்கும் நீங்கள் முருகனின் ஆண்டி கோலத்தை தரிசிக்கலாம்.



மன குழப்பத்தால் அவதி அடைபவர்கள் ஆண்டிக் கோல முருகனை வழிபடச் சொல்லலாம். அவர்களின் மன நிலையில் மாற்றங்கள் ஏற்படுவதை கண்கூடாகப் பார்க்கலாம்.

பேச இயலாதவர்கள், குறைபாடு உள்ள வர்கள், மன எழுச்சி, மனஉளைச்சல் உள்ளவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தைப் பார்த்தால் ஒரு சாத்வீகம், சமத்துவம் அவர்கள் மனதிற்குள் பாயும் இது இக்கோவிலின் தேவரகசியமாகும்.

திங்கள் கிழமையில் காலைநேரத்தில் மலையேறி முருகப் பெருமானை ஆண்டி கோலத்தில் தரிசித்தால், வாழ்க்கையில் இருக் கக்கூடிய தடைகள் அனைத்தும் நிவர்த்தி யாகி படிப்படியான முன்னேற்றம் மாற்றம் ஏற்படும்.


Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்

தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை

அரசு பதிவு பெற்ற மருத்துவமனை



மதுரை தெப்பக்குளம்:
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் எதிர்புறம்,
அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி,
தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500

சென்னை:
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு,
MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

இராமநாதபுரம் கிளை:
NO 9, RR சேதுபதி நகர். காவல் நிலையம் பின்புறம். இராமநாதபுரம்.
அலைபேசி: 9944167183. 9360132498

HOSPITAL Regn. No. : MADUAYU20210028270 • ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL

இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு

41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.

Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com

Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791



தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics

# சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு அபிஷேகம் நடைபெறும் முருகன் கோவில்

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து சுமார் 22 கி.மீ தொலைவில் உள்ளது மேலக்கொடுமலூர். முருகப்பெருமான்.

சூர சம்ஹாரத்துக்குப் புறப்பட்ட போது, அன்னை சக்தியிடமிருந்து வேல் மற்றும் பல ஆயுதங்களைப் பெற்றுச் சென்றார். அவற்றுள் பிரதானமான `மழு' எனும் ஆயுதத்தை முருகப் பெருமான் பெற்ற தலம் தான் கொடுமழுவூர் என்றழைக்கப்படும் மேலக்கொடுமலூர்.

அசுரர்களை அழித்துவிட்டுத் திரும்பிய முருகப் பெருமான், மாலை வேளையில் இத்தலத்தை அடைந்தார். அங்கே தவமியற்றிக்கொண்டிருந்த முனிவர்களுக்கு மேற்கு முகமாகக் காட்சியளித்தவர், அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்தத் தலத்திலேயே ஸ்ரீகுமரய்யா என்னும் திருப்பெயருடன் கோயில் கொண்டார்.

## முருகனுக்கு முக்கனி பூஜை

இங்கே முருகப்பெருமான் அஸ்தமன வேளையில் முனிவர்களுக்குக் காட்சி தந்ததால், சூரியஅஸ்தமனத் துக்குப் பிறகே அபிஷேக ஆராதனைகள் நடைபெறு கின்றன.

திங்கள், வெள்ளி, கிருத்திகை ஆகிய நாள்களில் இரவு வேளைகளில் 33 வகையான திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. வைகாசி மாதம் கடைசி வெள்ளிக் கிழமையன்று மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளால் செய்யப்படும் முப்பழ பூஜை மிகவும் பிரசித்திபெற்ற பூஜையாகும்.

இங்கே ஸ்ரீகுமரய்யாவுக்கு சுத்த அன்னம் நைவேத் தியம் செய்யப்படுவதில்லை. பழங்கள், தேன் கலந்த தினைமாவு, வெல்லம் கலந்த பாசிப்பருப்பு, கைக்குத்தல் அரிசிஆகியவையே நைவேத்தியமாகப் படைக்கப்படு கின்றன.

பாம்பன் சுவாமிகள், திருவேகம் பத்தூர் கவி ராஜ பண்டிதர், எமனேஸ்வரம் ஜவ்வாது புலவர் ஆகியோர் இத்தலத்தில் அருளும் முருகனைப் போற்றிப் பாடியுள் ளனர். இங்கு முருகப்பெருமான் பல்துலக்கி விட்டு வலப்புறமாக வீசிய குச்சியே உடைமரமாக வளர்ந்து, கோயிலின் தலவிருட்சமாக அமைந்திருப்பதாக கூறப் படுகிறது.

## முருகன் அருளால் முழங்கால் வலி தீரும்!

தீராத முழங்கால் வலியால் அவதிப்படுபவர்கள், இந்தக் கோயிலுக்கு வந்து குமரய்யாவை வேண்டிக் கொண்டு,



மஞ்சள் பூசப்பட்ட உடைமரக் கால்களை (கவட்டையுடன் கூடியது) வாங்கி சமர்ப்பித்தால், நாள்பட்ட முழங்கால் வலி நீங்கி விடும் என்பது பக்தர்களது நம்பிக்கை.

மேலும் வயிற்று வலி, நெஞ்சு வலி ஆகிய பாதிப்பு களால் அவதிப்படும் அன்பர்கள், இங்கு வந்து மாவிளக்கு ஏற்றி வைத்து முருகப் பெருமானை வணங்கி வழிபட்டுச் சென்றால், விரைவில் அந்தப் பிரச்னைகள் தீரும் என்கிறார்கள்.

அதேபோல், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் 48 நாள்கள் விரதம் இருந்து, கோயிலின் தலவிருட்சமான உடைமரத்தின் இலைகளைப் பிரசாத மாகப் பெற்று உண்டால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்ப தால், ஏராளமானோர் இந்த பிரசாதத்தை வாங்கி பயன டைந்துள்ளனர்.



ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை

ஆறுபடை முருகன் கோவில்களில் நடைபெறும் தைப்புச விழா காண வருகை தரும் பக்தர்களை வருக வருக பழனிமலை முருகன் அருள் பெருக...









# ஸ்ரீ தர்ம சாஸ்தா கலைக்கூடம்

## PS.A.கண்ணன் ஸ்தபதி

புதிய கோபுர திருப்பணிகள், பழைய கோபுரங்கள் மராமத்து வேலைகள், வர்ண வேலைகள், கல்திருப்பணிகள் மற்றும் கல் சிலைகள், சிறந்த முறையில் செய்து தரப்படும்




Res: 9655384707
செல்: 9442042858
9585055183
8072848048

கண்ணங்காரக்குடி (சாஸ்தார்கோவில்) இராமச்சந்திரபுரம் (Po)
திருமயம் (TK) புதுக்கோட்டை மாவட்டம்-622 505

aanmeegamalar.com

# ஒவ்வொரு ராசிக்குரிய முருகன் கோயில்கள்!!



எல்லா முருகன் கோவிலும்
சிறப்புதான்...
முருகன் என்றாலே
சிறப்புதானே...

முருகன் கோவில்களில் முதன்மையான கோயில்.. மயிலம் சுப்பிரமணியர் கோயில் செவ்வாயின் ஆதிக்கம் அதிகம் உள்ள முருகன் கோயில் இது. திண்டிவனம் அருகே உள்ளது இந்த கோயில். ஒரு முறை சென்று வாருங்கள்... வாழ்வில் நல்ல மாற்றத்தை உணர்வீர்கள்..

மேலும் செவ்வாய் ஆகர்ஷனம் அதிகம் உள்ள கோயில்கள் பற்றின விவரங்கள் கீழே...

இதன் விசேஷம் என்னவென்றால் இதன் அருகே உள்ள மண் எல்லாம் சிவப்பு நிறமாகத் தான் இருக்கும்.

ராசிப்படி முருகன் கோயில்கள்..





**மேஷம்:** தாண்டுகுடி முருகன் கொடைக்கானல்,
**ரிஷபம்:** சுவாமிமலை:
**மிதுனம்:** செவலூர் பூமினாதேஸ்வரர்
**கடகம்:** பழனி முருகன்
**சிம்மம்:** திருபரங்குன்றம் முருகன்
**கன்னி:** திருசெந்தூர் முருகன்
**துலாம்:** வைதீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமி
**விருச்சிகம்:** மன்னச்சநல்லூர் பூமி நாதேஸ்வரர்:
**தனுசு:** திருத்தணி
**மகரம்:** வயலூர் முருகன்
**கும்பம்:** ஓரக்காட்டு பேட்டை குணம் தந்த நாதர் செங்கல்பட்டு அருகில்
**மீனம்:** திருவக்கரை பத்ர காளி

குறிப்பிட்ட கோயில்களில் உள்ள முருகனை, குறிப்பிட்ட ராசிகாரகள் வழிபட நன்மை நிச்சயம் உண்டு.

## முருகனும் 12 கைகளும்

முருகனின் பன்னிருகரங்களில் இரு கரங்கள் தேவர்களையும், முனிவர்களையும் காக்கின்றன.

மூன்றாவது கை அங்குசத்தினைச் செலுத்துகிறது.

மற்றொரு கை ஆடை உடுத்திய தொடையில் பதிந்திருக்கிறது.

ஐந்து மற்றும் ஆறாவது கைகள் வேலைச்சுழற்றுகின்றன.

ஏழாவது கை முனிவர்களுக்கு அரும் பொருளை உணர்த்துகிறது.

எட்டாவது கை மார்பில் உள்ள மாலையோடு விளங்குகிறது.

ஒன்பதாவது கை வளைகளோடு சுழன்று வேள்வியை ஏற்கிறது.

பத்தாவது கை மணியை ஒலிக்கிறது.

பதினோராவது கை மழையை அருள்கிறது.

பன்னிரண்டாவது கை மணமாலை சூட்டுகிறது.

## பழநி முருகனை காக்கும் காவிரி நதி

அறுபடை வீடுகளில் மூன்றாம் படைவீடான திருவாவினன்குடி அமைந்து இருக்கும் பழனியில் பங்குனி மாதம் உத்தரம் நட்சத்திர திதியில் நடைபெறும் விழா பங்குனி உத்தரம் ஆகும். அனைத்து அறுபடைவீடுகளில் பங்குனி உத்தரம் விழா நடைபெற்றாலும், பழனியில் நடைபெறும் பங்குனி உத்தரம் திருவிழாவும், தேரோட்டமும், சிறப்பு வாய்ந்த திருவிழாவாகும்.

திண்டுக்கல் மாவட்டமும், அதைச்சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து, சைவ சமயத்தவர்கள்,ஈரோடு மாவட்டம், கொடுமுடிக்குச் சென்று காவிரி நதியில் தீர்த்தம் (புனிதநீர்) கொண்டுவந்து, பழனியில் போகரால் நிறுவப்பட்ட நவபாசாண முருகனுக்கு செலுத்துவார்கள். பங்குனியில் வெயில் கடுமையாக இருக்கும், நவ பாசாணத்தால் ஆன முருகன் சிலை வெப்பத்தால் சிதைந்து போகாமல் இருக்க மூலிகைகள் கலந்த காவிரி நதியின் நீரால் குளிர்விப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திருவிழா பங்குனி உத்தரம் திருவிழா.



aanmeegamalar.com

# கணக்கன்பட்டி சித்தர் நிகழ்த்திய அற்புதங்கள்

பழனி முருகன் திருக்கோவில் அருகில் இருந்து 8கிமீ தொலைவில் இருக்கும் கிராமம் தான் கணக்கன்பட்டி. இங்கும் வாழ்ந்த மிக சக்தி வாய்ந்த மகான் கணக்கன்பட்டி மூட்டை சாமி என்கிற சத்குரு காளிமுத்து பழனி சாமி சித்தர்.

சாய்பாபாவின் மறு அவதாரமாக கருதப்படும் இவர் வாழும் போதே பல அதிசயங்கள் நிகழ்த்தியவர். ஒருநாள் வெளிநாட்டில் இருந்து ஒரு குடும்பம் பேச முடியத தன் குழந்தைக்கு பேச்சு வர பழனி முருகனை காண காரில் வந்து கொண்டு இருந்தனர்.

அப்போது அந்த கார் கணக்கன்பட்டி வழியே வரும் போது அங்கு ஒரு பெரியவர் பச்சை வேஸ்டி சட்டை யுடன் தலை பாகையுடன் வழிமறித்தார். இவர்கள் பயத்துடன் இறங்கினர். இவர்கள் சுத்த சைவம் சாமி அவர்கள் "இந்த பொம்பல போய் எதிருல இருக்கற கடையில் பிரியாணி வாங்கிவா" என்றார்.

இவர்கள் முழித்தார், அருகில் இருந்தவர்கள் சாமி சொல்வதை செய்து விடுங்கள் சாமி சக்தி வாய்ந்தவர் என்றனர்.



மூக்கை பிடித்து கொண்டு வாங்கி வந்தார் அந்தபெண் மணி. இந்த சாப்பாட்டை அந்த பையனுக்கு கொடு என் றார்.

தடுமாறினர் அந்தபெண்மணி பொட்டலம் பிரித்து பார்த்தார் அந்தபெண்மணிவாங்கி வந்த பிரியாணி சாம்பார் சாதம் ஆக மாறி இருந்தது.

இதை கண்டு ஆச்சரி யத்துடன் கை எடுத்து வனங்கிவிட்டு பழனி நோக்கி சென்றனர்.

அப்போது அவர்களின் காருக்கு எதிரில் ஒரு வண்டி வந்தது அதை கண்ட அந்த சிறுவன் அம்மா வண்டி என்று கத்தினான்.

அந்த சிறுவனிடம் இதை சற்றும் எதிர் பார்க்காத அந்த பெண்மணி சாமியின் மகிமை கண்டு ஆனந்த கண்ணீர் வடித்தார் .அவர் இருக்கும் திசை நோக்கி வணங்கினார். இவ்வாறாக பலரின் கர்ம வினை தீர்த்து அவர்களின் வாழ்க்கையை மாற்றியவர் நம் சித்தர் கணக்கன்ப்பட்டி மூட்டை சாமி.

இவரிடம் யார் சென்றாலும் போய் அந்த கல்லு எடுத்து அங்க போடு, இங்க கூடு கட்டு என்று சொல்லுவார். ஒருமுறை ஒருவர் நிலம் வாங்க இவரிடம் உத்தரவு கேட்கும் போது, கிழக்கு போய் வடக்கு போ என்று சூசகமாக கூறினார். உத்தரவு கேட்கவந்தவர் இரண்டு நிலம் பார்த்துள்ளார். அதில் ஒன்று வடக்கில் இருந்துள்ளது அதன் வழி கிழக்கு பார்த்து இருந்துள்ளது. கிழக்கு போய் வடக்கு போ என்று சுவாமி இதை தான் சூசகமாக கூறி உள்ளார் என்று எண்ணி அவரும் அந்த நிலத்தை வாங்கி வளர்ச்சி அடைந்துள்ளார்.

இவரின் ஜீவ சமாதிக்கு சென்றால் நிச்சயம் மாற்றம் உண்டாகும்.

இவரின் ஜீவ சமாதியில் ஒரு நல்ல அதிர்வலைகளை நன்றாக உணரலாம்.பழனி பேருந்து நிறத் தில் இருந்து சுமார் 8கிமீ தொலைவில் உள்ளது பஸ் வசதியும் உள்ளது.

கணக்கம்பட்டி சுவாமிகளின் ஜீவ சமாதி குருபூஜை பத்தாம் ஆண்டுப் பெருவிழா 21.02.2024 புதன்கிழமை யன்று நடைபெற விருக்கிறது.



# கும்பாபிஷேகத்திற்கு கங்கை தீர்த்தம் தரும் குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவில்





சிவவழிபாடுகளில் முக்கியமாக பிரதோஷ வழிபாடு உள்ளது. பிரதோஷம் நேரமான மாலை வேளையில் நந்தி பகவானுக்கும் சிவனுக்கும் ஒரேநேரத்தில் அபிஷேக வழிபாடு நடைபெறும்.

இந்த நேரத்தில் பக்த்தர்கள் நந்தி பகவானுக்கு வைக்கப் படும் வேண்டுதல்களை சிவபெருமான் தீர்த்து வைக்கிறார் என பக்த்தர்களால் நம்பபட்டு வருகிறது.

ஞாயிறு முதல் சனி வரை ஒவ்வொரு கிழமைகளில் வரும் பிரதோஷம் பலவிதமான நன்மைகளை தருகிறது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி

சாலையில் உள்ள குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் வளாகத்தில் காசியில் இருந்து பூஜித்து காசிவிஸ்வ நாதர், காசி நந்தி மற்றும் காசி துர்க்கை காசிகுருபகாவன் போன்ற சன்னதிகள் காசியில் எப்படி உள்ளதோ அதேபோல் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது.

பக்தர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இங்கு வழங்கபடும் கங்கைதீர்த்தால் அபிஷேகம் செய்து சிவபெருமானின் விக்ரகத்தைத் தொட்டு மனமுருகி வேண்டி வழிபட்டு செல்லலாம்.

ஆண்டு தோறும் காசி கங்கை கரையில் முன்னோர் தர்பணம் திதி போன்றவை குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவிலில் தை, ஆடி புரட்டாசி அமாவாசை தினங்களில் இங்கு நடைபெறுகிறது.

கோவில் கும்பாபிஷேகத்திற்கும் கங்கை தீர்த்தம் இலவசமாக வழங்கபட்டு வருகிறது. கோவில் பற்றியும், கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் தேவைப்படுபவர்களும் கீழே காணும் எண்ணில் தொடர்பு கொண்டால், கங்கை நீரைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் கூறப்படும், கங்கை நீர் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்: 9444159653.

முன்னோர்கள் திதி தர்ப்பணம் நடைபெறும் நாள்:

ஆடி அமாவாசை மற்றும் மாஹாளய அமாவாசை வரும் பிப்ரவரி 9.2.2024 தை அமாவாசை முன்னிட்டு திதி முன்னோர் தர்ப்பணம் நடைபெறும்.







aanmeegamalar.com



# பழனி தைப்பூச விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை வருக! வருக! என வரவேற்கிறோம்

நற்பவி என்று சொல்வோம் நன்மைகள் பல செய்வோம்

## சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம்

# குறிச்சி ஸ்ரீ வழிவிடுபெரியநாச்சி ஸ்ரீ காசிவிஸ்வநாதர் திருக்கோவில்








**கோவில் நிகழ்ச்சிகள் விபரம்**

- மாதம்தோறும் பிரதோஷ வழிபாடு மற்றும் சனிபிரதோஷ விழா, பௌர்ணமி பூஜை
- 25.01.2024 தைபூசம் செந்தில் ஆண்டவர்க்கு அபிஷேக அன்னதானம்
- 08.03.2024 மஹாசிவராத்திரி இரவு முழுவதும் அபிஷேகம் பூஜை வழிபாடு
- 25.03.2024 பங்குனி உத்திர விழா அபிஷேகம் அன்னதானம்
- 14.04.2024 தமிழ்வருட பிறப்பு சிறப்பு பூஜை தொடர்ந்து சித்திரை பௌர்ணமி விழா
- 22.05.2024 வைகாசி விசாகம் விழா
- ஆடி அமாவாசை, புரட்டாசி மாஹாளா. அமாவாசை தினங்களில் காலை 7 மணிமுதல் 12 மணிவரை முன்னோர்கள் தர்ப்பண பூஜை அன்னதானம்
- ஐப்பசி அன்னாபிஷேகம், திருக்கார்த்திகை தீப விழா

கோவில் கும்பாபிஷேகத்திற்கு இலவசமாக கங்கை தீர்த்தம் வழங்கப்படுகிறது
தமிழகத்திலேயே காசி சிவனுக்கு கங்கை தீர்த்தம்
அபிஷேகம் செய்து பக்தர்கள் அனைவரும்தொட்டு வழிபடும் கோவிலாகும்.



இறைபணியில்

**S.P.தேவர்**

புபேஸ் ரியல் எஸ்டேட்
22, பனகல் பார்க், சென்னை17
செல்: 9444159653,
9444638782, 9443020577,
9176242221 9566183703
வீடு 04423751097






aanmeegamalar.com

## இலங்கையில் புத்தரிசி படையல், மலேசியாவில் 8மணி நேர பாதயாத்திரை

# உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும் தைபூசம்



அசுரனை அழிக்க அன்னையிடம் வீரவேலை வாங்கி, கையில் ஏந்திய நாளே தைப்பூசம் ஆகும்.

முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கிய மானது தைப்பூசம் ஆகும். 27 நட்சத்திர மண்டலங் களில் எட்டாவது நட்சத்திரம் பூசம் ஆகும். தை மாதத்திலே பூச நட்சத்திரம் வரும் புண்ணிய நாள் தைப்பூச விழாவாக உலக மெங்கும் கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசம் வரும் நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும். தைப் பூசம் முருகப்பெருமானுடைய விஷே சமாக கொண்டாடப்பட்டு வருகின் றன.

அன்றைய தினம் குழந்தைகளுக்கு காது குத்துதல், படிப்பைதொடங்குதல் போன்றவற்றை சிறப்பாக செய்வார்கள்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது மலே சியா, சிங்கப்பூர் என உலகின் பல் வேறு நாடுகளில் உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் வெகு சிறப்பாக கொண் டாடப்படுகின்றது.

**ஏன் இத்தினம் சிறப்பு:** தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே பல் வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவபெரு மானிடம் தேவர்கள் முறையிட்டனர். தங்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே தங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல்வாய்ந்த, சக்தி மிக்க ஒரு தலைவனை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் சிவ பெருமானிடம் வேண்டினர்.

தேவர்களின் நிலைகண்டு சிவ பெருமான், அவர்களின் முறையீட் டை ஏற்று தனது தனிப்பட்ட சக்தியால் உருவாக் கிய அவ தாரமே கந்தன். அப்படி அவதரித்தவரே கந்தன் எனப்படும் முருகனாவார். சிவபெருமானின் தேவி யான அன்னனை பார்வதி தேவியானவள் ஆண்டி கோலத்தில் பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப் பெருமானுக்கு ஞானவேல் வழங்கியது தைப்பூச நாளில்தான்.

அதன்காரணமாகவே பழனி மலையில் தைப்பூசத் திருவிழா மற்ற முருகன் கோவில் களைக் காட்டிலும் வெகுச் சிறப்பாகக் கொண் டாடப்படுகிறது. அப்படி அளிக்கப் பட்ட வேலினை ஆயுதமாகக் கொண்டே முருகன் அசுர குலத்தை அழித்து தேவர்களைக் காப் பாற்றினான்.

தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த அரக்கர்களை திருச்செந் தூர் எனப்படும் திருச்சீரலைவாயில் வதம் செய்து தேவர்கள் நிம்மதி அடையச் செய்தவர் முருக கடவுள். எனவே தான் அசுரர்களை வதம் செய்ய முருகப்பெருமான் பயன் படுத்திய வேலினை வழிபட்டால், தீய சக்திகள் நம்மைத் தாக்காமல் இருப்பதுடன், அந்த சக்திகள் நமக்கு அடி பணிந்து நல்லருளை நல்கும் என்பது ஐதீகம்.

தைப்பூசத்தை முன்னிட்டு முருக பக்தர்கள், மார்கழி மாத ஆரம்பத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங் குகின்றனர். சஷ்டி கவசம், சண்முக கவசம், திருப் புகழ் போன்ற பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்து தைப்பூசத்தன்று பழனி முருகன் கோவிலில் சிறப்பு வழிபாடு செய்து விரதத்தை முடிப் பார்கள்.

தைப்பூசத்தன்று முருகனுக்கு காவடி நேர்த்திக்கடன் செலுத்து வதையும் பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்த தைபூசம் இந்தியா மட்டுமல்ல உலகெங்கும் பல நாடுகளில் வெகு விமரிசையாக



aanmeegamalar.com

கொண்டாடப்பட்டு வருகின்றன. உலகெங்கும் தைபூசம் கொண்டாடினாலும் ஒருசில ஊர்களில் வித்தியாசமாகவும் தை பூசத்தை கொண்டாடுகின்றனர்.

## இலங்கையில் புத்தரிசி கொண்டாட்டம்

தைப்பூசத்தில் தான் யாழ்ப்பாண மக்கள் புதிர் எடுப்பர். தைப்பூசம்முருகனுக்கு உரிய சிறப்பான தினமாகக் கொண்டாடப்படுகின்றது. அன்று அதிகாலையில் எழுந்து வீடு வாசலைச் சுத்தம் செய்து வீட்டில் இருக்கும் ஆண்கள் நெல்லறுக்கும் அரிவாள், தேங்காய், கற்பூரம், கத்தி, கடகம் என்பவற்றுடன் வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரியனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டிற்கு எடுத்து வருவர்.

அதனைக் குடும்பத்தலைவி பெற்று சுவாமி அறையில் வைப்பார். அதில் இருந்து சில நெல்மணிகளை எடுத்து உமியை நீக்கி அந்த அரிசியைப் பசும்பாலுடன் கலந்து வாழைப் பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி அதில் இட்டு குடும்பத்தினருக்குப் பரிமாறுவர். அந்த அரிசியுடன் வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு சமைக்கப்படும்.

## மலேசியாவில்: 8 மணிநேர பாதயாத்திரை

மலேசியாவில் முருகனுக்கு எட்டுமணி நேரத்திற்கு மேல் பாதயாத்திரையாக செல்வது வழக்கமாக கடைபிடிக்கின்றனர். சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து லட்சக்கணக் கான பக்தர்கள் மலேசியா பத்துமலையில் குவிகிறார்கள். தைப்பூச நன்னாளில் பக்தர்கள் கோலாலம்பூர் மாரியம்மன் கோவிலிருந்து பத்து மலைக்கு அதிகாலையில் தொடங்கி ஊர்வலமாக நடந்து வருகிறார்கள். இதற்கு எட்டு மணி நேரமாகும். நேர்த்திக்கடன் செலுத்த சிலர் காவடி எடுத்து வருகிறார்கள். அலகு குத்தியும் இவ்வளவு தூரத்தை கடந்து நேர்த்திக்கடன் செலுத்துவோர் உண்டு.

## பினாங்கு 3 நாள் தைப்பூசம்

மலேசியாவின் பினாங்கு மாநிலத்தில் உள்ளதண்ணீர் மலை கோவிலில் பினாங்கு தைப்பூசம் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. தண்ணீர் மலை கோவில் இந்தியாவுக்கு வெளியே அமைந்துள்ள முருகன் ஆலயங்களில் மிகவும் பெரியதாகும். தமிழர்கள் மட்டுமின்றி சீனர்களும் தைப்பூசத்தை மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இத்தைப்பூசத் திருநாள் மூன்றுநாள் நடைபெறும். தைப்பூசத் திருநாளை பினாங்கு மாநில அரசு பொது விடுமுறையாக அறிவித்துள்ளது.

## உலகஅளவில் விடுமுறை

முருகனுக்கு உரிய தைப்பூசத்தன்று தமிழகம் மட்டுமின்றி, கேரளாவின் ஒருசில மாவட்டங்கள், புதுச்சேரி, மலேசியா, சிங்கப்பூர், பினாங்கு போன்ற வெளிநாடுகளில் விடுமுறை அளிக்கப்படுகிறது.

அதேப்போன்று மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா, பிஜி ஆஸ்திரேலியாபோன்ற நாடுகளில் ஒருசில மாவட்டங்களில் உள்ளூர் விடுமுறைகொடுக்கப்படுகிறது.




aanmeegamalar.com

# மேன்மைதரும் மேற்கு நோக்கிய விநாயகர்

நம் வாழ்வில் மேன்மை களை தரும் மேற்கு நோக்கி பக்தர்களுக்கு அருள் பாலிக் கும் சித்தி புத்தி விநாயகர் கோவில் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வைகை ஆற்றின் கீழ்கரையில் அமைந்து உள்ளது. கங்கை போல் வடக்கு தெற்காக பாயும் மானாமதுரை வைகை ஆற்று கரையில் மேற்கு திசை நோக்கி சித்தி புத்தி விநாயகர் கோவில் மட்டுமே உள்ளது.

பல ஆண்டு காலம் அரச மரத்தை தல விருட்சமாக கொண்ட இக்கோவிலில் சங்கடஹர சதுர்த்தி, வருஷாபிஷேகம், விநாயகர் சதுர்த்தி நாட்களில் பல வகை அபிஷேகங்களுடன்


சிறப்புபூஜை நடைபெறுகிறது. மானாமதுரை பகுதியில் உள்ளவர்கள் வீட்டு விசேஷ பத்திரிகைகளை இங்கு இங்கு வந்து வைத்து மேற்கு நோக்கி

காணப்படும் சித்தி புத்தி விநாயகரை வணங்கிய பின் தங்கள் வீட்டு விஷேச பணிகளை செய்து வருகின்றனர்.

புத்திரபாக்கியம், திருமண தடை விலகுவதாகவும், நவக்கிரக தோஷகிரக பாதிப்பு நீங்குவதாகவும் பக்தர்களால் நம்பப்படுகிறது.

தூய பசும்பால் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. புதுப்பிக்கப்பட்டு கும்பாபி ஷேகம் கண்ட சித்தி புத்தி விநாயகர் கோவிலில் நாகர், நவக்கிரக சன்னதி உள்ளது.

வெளியூர் செல்லும் பக்தர்கள் தினமும் ஏராளமானோர் காலை, மதியம் அரசமரத்தை சுற்றி வலம் வந்து சித்தி புத்தி விநாயகரை தரிசித்து செல்கின்றனர்.






## சங்கடஹர சதுர்த்தியும், 2024ம் சங்கடஹர சதுர்த்தி தினங்களும்

ஸ்ரீ விநாயகப் பெருமானை தேய்பிறை சதுர்த்தியில் வழிபாடு செய்வது மிகப் பெரும் நற்பலன்களைத் தரக்கூடியது. சங்கடம் என்றால் இக்கட்டு, தொல்லைகள், கஷ்டங்கள், தடைகள் என்று அர்த்தம். ஹர என்றால் நீக்குவது என்று பொருள். பௌர்ணமிக்கு அடுத்ததாக வரும் சதுர்த்தி திதியே சங்கடஹர சதுர்த்தி ஆகும்.

### 2024 ஆம் ஆண்டு சங்கடஹர சதுர்த்தி தேதிகள்

| | | |
|---|---|---|
| ஜனவரி–29 | தை–15 | திங்கள் |
| பிப்ரவரி–28 | மாசி–16 | புதன் |
| மார்ச்–28 | பங்குனி–15 | வியாழன் |
| ஏப்ரல்–27 | சித்திரை–14 | சனி |
| மே–26 | வைகாசி–13 | ஞாயிறு |
| ஜூன்–25 | ஆனி–11 | செவ்வாய் |
| ஜூலை–24 | ஆடி–7 | புதன் |
| ஆகஸ்ட்–22 | ஆவணி–6 | வியாழன் |
| செப்டம்பர்–21 | புரட்டாசி–5 | சனி |
| அக்டோபர்–20 | ஐப்பசி–3 | ஞாயிறு |
| நவம்பர்–19 | கார்த்திகை–4 | செவ்வாய் |
| டிசம்பர்–18 | மார்கழி–3 | புதன் |

ஆகஸ்ட் – 22 ஆவணி – 6 வியாழன்
(மகா சங்கடஹர சதுர்த்தி)



# சென்னையில் சித்தர்கள் நாளில் அன்னதான பெருவிழா

அனைத்து சித்தர் பெருமக்களுக்காக செய்யப்படும் பூஜை இது, இந்த உலக வாழ்க்கையே வேண்டாம் என்று உதறி விட்டு மற்றவர்களுக்காக வாழ்ந்து ஆசீர்வாதம் வழங்கிக்கொண்டிருக்கும் சித்தர்களுக்கான நாளாக வரும் பிப்ரவரி மாதம் 14 ந்தேதி புதன்கிழமை அன்று அவர் களுக்காக சிறப்பு பூஜையும், பக்தர்கள் அனைவருக்கும் சிறப்பு அன்னதானமும் நடத்தப்பட உள்ளது.

இந்த அன்னதானத்தின் சிறப்பு எத்தனையோ பக்தர்களுக்கு இது ஒரு அரு மருந்து உடல் மற்றும் மன பினியை நீக்கி அனைத்து ஆன்மாக்களுக்கு பிரசாத மாக திகழ்கிறது

கர்மயோகி பகவான் ஸ்ரீ குரு தாத்தா சுவாமிகளின் சித்தர் பெருமக்களுக்கான குரு பூஜை மற்றும் அன்னதான விழா சென்னையில் வருகின்ற 14.02.2024 புதன் கிழமை மாசி மாதம் 2 ஆம் தேதி அன்று குரு பூஜை மற்றும் அன்னதான விழா காலை 10:00 மணிக்கு நடைபெற உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 14 ஆம் தேதி அனைத்து சித்தர் பெருமக்களுக்காக நடத்தப்படும் குரு பூஜை மற்றும் அன்னதான விழாவின் சிறப்பு இந்த கண்ணுக்கு புலப்படுகின்ற அனைத்தும் நிறந்திரம் இல்லாதவை என்று உணர்ந்து உலக வாழ்லை துறந்து எந்த சுயநலமும் இல்லாமல் பிறருக்காகவே வாழும் அந்த சித்தர் பெருமக்களை சிறப்பிர்க்கும் வகையில் இது அமைந்திருக்கிறது.

இந்த உலக வாழ்க்கையே உண்மை என்று எண்ணி துன்பத்தில் சிக்கித் தவிக்கும் அனைவருக்கும் சித்தர் பெருமக்களின் ஆசீர்வாதம் அவர்களுக்கு துன்பங்கள் நீங்கி நல் வழியை காட்டும்.

பல பிறவிகளில் நாம் செய்த பாவங்கள் புனித கங்கையில் நீராடினாலும், எத்தனை பரிகாரங்கள் செய்தாலும் தீராது.

குரு பார்வை கோடி நன்மை என்று நாம் எல்லோரும் கேள்விப் பட்டிருப்போம் அதாவது

குருமார்களின் பார்வையே இவ்வகை பாவங்களை தீர்க்க முடியும்.

தன்னை அறிந்தவன் மனிதன் பிறரை அறிந்தவர் ஞானி அப்பேற்பட்ட ஞானியின் தரிசனம் நம் சகல தோஷங்களையும் நீக்கி நமது வாழ்வை நல்லபடியாக மாற்றிவிடும்.

இந்த அன்னதானத்தின் சிறப்பு என்னவென்றால் சித்தர் பெருமக்களின் ஆசீர்வாததுடன் கூடிய உணவை உண்ணுபவர்களுக்கு சகல விதமான உடல் மற்றும் மன பினி நீங்கி உணவே அறு மருந்தாக செயல்படுகிறது.

ஆன்மீக அன்பர்களும் பொதுமக்களும் வருகை தந்து சித்த பெருமக்களின் ஆசியை பெற்று அன்னதான விழாவினை சிறப்பித்து தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**கர்மயோகி பகவான் ஸ்ரீ குரு தாத்தா சுவாமிகள் அவர்களின் தரிசனத்தை பக்தர்கள் பெற**
**எண். 160.3 ஆவது தெரு. B.V. காலனி, வியாசர்பாடி. சென்னை39.**
**மேலும் தகவல்களுக்கு அனுக வேண்டிய தொலைபேசி எண்கள்: 80159 21657**
**வாட்ஸ்அப் எண்: 9361917913**

aanmeegamalar.com

# பயம், நோய் போக்கும் சண்முக கவசம்

முருகப்பெருமானைத் தவிர வேறு யாரையும் வணங்குவதில்லை என்ற கொள்கையோடு முருகன் மீது 6666 பாடல்கள் பாடியவர் பாம்பன் சுவாமிகள். இவர் இயற்றிய சண்முக கவசம் புகழ்பெற்ற நூலாகும். கந்த சஷ்டி கவசம் போல இது பயமும், நோயும் தீர்க்கும் மருந்து என்றால் மிகையில்லை.

பாம்பன் சுவாமிகள், சென்னை தம்புச்செட்டித் தெருவில் செல்லும்போது எதிர்பாராமல் குதிரைவண்டி மோதியதில் இடக்காலில் முறிவு ஏற்பட்டது. 73 வயதில் நேர்ந்த இந்த விபத்தால் இனி சுவாமிகளால் நடக்க முடியாது என்று மருத்துவர்கள் சொல்லி விட்டனர்.

சுவாமிகள் மீது அன்பு கொண்ட சில பக்தர்கள், அவர் அருகே அமர்ந்து சண்முக கவசத்தை விடாமல் நம்பிக்கையோடு பாரா யணம் செய்து வந்தனர். "சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க" என்னும் அடியைப் பாடியபோது சுவாமி களின் கால்கள் குணமானது.

அப்போது வானத்தில் இரு மயில்கள் தோகை விரித்து ஆடிய காட்சியை சுவாமிகள் கண்டார். தமிழிலுள்ள உயிர் எழுத்துகள் பன்னிரண்டையும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டையும் முதலெழுத்தாகக் கொண்டு 30 பாடல்களுடன் பாடப்பட்டது சண்முக கவசம்.

தினமும் ஆறுமுறை சண்முக கவசத்தை பாடுபவர்கள் எத்தகைய நோயில் இருந்தும் விடுபடுவர் என்பது நம்பிக்கை. குறிப்பாக, முருகன் பிறந்த வைகாசி விசாகத் தன்று பாடினால் இரட்டிப்பு பலன் கிடைக்கும்.



# லட்சுமிதேவி கடாட்சத்துடன் காட்சி தரும் திருத்தணி முருகப்பெருமான்



கயிலாய மலைக்கு ஈடாக கருதப்படும் மலை திருத்தணி மலை. என்று அருணகிரிநாதர் திருப்புகழில் பாடி இருக்கி றார். முருகப்பெருமானுக்கு உரிய திருவுருவங்கள் 16. அதில் ஞானத்தை அருளும் ஞானசக்திதரனாக திருத் தணியில் வீற்றிருக்கிறார். சாந்தமான முகத்துடன், இடது கையைத் தொடையில் வைத்து, வலது கையில் வேல் தாங்கி காட்சி தருகிறார்.

தாரகாசுரனிடம் போர்புரிந்து சக்ராயுதத்தை இழந்த திருமால், மீண்டும் தன் சக்ராயுதத்தை பெற்றுத் தந்த பெருமை கொண்டவர் இம்முருகனே. முருகப்பெரு மானுக் குரிய வாகனமாக எங்கும் மயில் இருக்க, இங்கு யானை வாகனமாக அமைந்துள்ளது.

லட்சுமியின் அம்சமான இந்த யானையுடன் கூடிய முருகனை வழிபடுவோருக்கு தேவர்களுக்கு நிகரான செல்வவளம் உண்டாகும் என்பது ஐதீகம். இதன் காரணமாகத்தான் புதுவருடப் பிறப்பின் போது இந்தத் தலத்தில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

இங்குள்ள இந்திரச்சுனை நீரால் முருகப்பெருமானுக்கு தினமும் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதில் பக்தர்கள் நீராட முடியாது. மார்கழி திருவாதிரை நாளில் முருகனுக்கு வெந்நீர் அபிஷேகம் செய்யப்படுவது சிறப்பு.

aanmeegamalar.com

# SCHOOL OF ALLIED HEALTH SCIENCES

**Vinayaka Mission's Research Foundation - Deemed To Be University**

(Declared Under Section 3 of the UGC Act, 1956) (Accredited by NAAC 'A' Grade)

https://fahs.ac.in/apply

The Allied Health Science Institute to have....

# NO NEET REQUIRED



## COURSES OFFERED @ SAHS

## UG Courses

**3 Years + 1 year Internship** | **Eligibility : +2 PCBM, PCBZ, PCB**

- B.Sc Anaesthesia Technology
- B.Sc Renal Dialysis Technology
- B.Sc Operation Theatre Technology
- B.Sc Trauma Care Management
- B.Sc Medical Lab Technology
- B.Sc Radiology and Imaging Technology
- B.Sc Physician Assistant
- B.Sc Cardiac Technology
- B.Sc Perfusion Technology
- B.Sc Neuroscience Technology

24 YEARS OF Excellence in Education

**Eligibility : +2 PCBM/PCBZ/PCB/PCMCS**

- B.Optometry
- B.Sc Forensic Science Technology

## Master Program

**2 Years**

- M.Sc Renal Dialysis Technology
- M.Sc Physician Assistant

Eligibility : B.Sc AHS / B.Sc Nursing

- Master of Optometry

Eligibility : B.Optometry

- M.Sc Cardiac Cath & Interventional Technology
- M.Sc Echocardiography
- M.Sc Anaesthesia Technology
- M.Sc Neuroscience Technology
- M.Sc Forensic Science Technology
- M.Sc Radiology & Imaging Technology

Eligibility : B.Sc AHS

- Master of Public Health

Eligibility : Bachelor Degree in MBBS / Ayush / Pharmacy / Physiotherapy / Occupational Therapy / Dentistry / Nursing / Veterinary Sciences / Allied Health Sciences / Life Sciences / B.Sc Botany & Zoology

- M.Sc Perfusion Technology

Eligibility : B.Sc in Perfusion Technology (3 Year + 1 Year Internship) / B.Sc Cardiac vascular Technology

- M.Sc Medical Lab Technology

Eligibility : Bachelor Degree in MLT / Biochemistry / Microbiology / Biotechnology / B.Sc. Chemistry (with ancillary subject of Biochemistry and Microbiology) Genetics degree

- M.Sc Trauma Care Management

Eligibility : B.Sc Trauma Care Management / Emergency and Trauma Care Technology / BPT / B.Sc Nursing

## Diploma Courses

**2 Years** | **Eligibility : 10th*/+2 with Science Stream**

- Diploma in Radiology & Imaging Technology
- Diploma in Medical Lab Technology
- Diploma in Operation Theatre & Anaesthesia Technology*

| Salem | Puducherry | Chennai |
|---|---|---|
| VIMS Hospital Campus | Aarupadai Veedu Medical College & Hospital Campus | Aarupadai Veedu Institute of Technology Campus |
| Mob : 7094450128<br>9159999572 | Mob : 9787136328<br>9750980225 | Mob : 8124648205<br>9159999572 |

## TOLL FREE : 18003093332

# ADMISSION OPEN 2024-25

## School of Rehabilitation and Behavioral Sciences Puducherry

SRBS

World Health Organization · World Hearing Forum · National Digital Library of India



To apply online

### Programmes Offered

**Undergraduate Programme**

- Bachelor in Audiology and Speech-Language Pathology

**Postgraduate Programme**

- Master of Science (Audiology)
- Master of Science (Speech-Language Pathology)
- Master of Science (Clinical Psychology)
- Master of Philosophy (Clinical Psychology)
- Post Graduate Diploma in Early Intervention

www.daslpvmrf.edu.in

## VINAYAKA MISSION'S COLLEGE OF NURSING, PUDUCHERRY

VMCON

( An Constituent College of Vinayaka Mission's Research Foundation )

Scan here for Website

ISO · National Digital Library of India · NPTEL LOCAL CHAPTER · swayam · WASH

### Programmes Offered

**Undergraduate Programme**

- B.Sc. (Nursing) - Bachelor of Science in Nursing
- P.B.B.Sc. (Nursing) - Post Basic Bachelor of Science in Nursing

**Postgraduate Programme**

- M.Sc. (Nursing) - Master of Science in Nursing



www.vmcnpdy.edu.in

## School of Physiotherapy

VMRF

ISO · National Digital Library of India · NPTEL LOCAL CHAPTER · swayam · WASH



Scan here for Website

### Programmes Offered

**Undergraduate Programme**

- B.P.T. - Bachelor of Physiotherapy

**Postgraduate Programme**

- M.P.T. - Musculoskeletal and Sports Physiotherapy
- M.P.T. - Neurological Physiotherapy
- M.P.T. - Cardio- Respiratory Physiotherapy
- M.P.T. - Pediatric Physiotherapy
- M.P.T. - Obstetrics and Gynaecological Physiotherapy
- M.P.T. - Community Physiotherapy

www.sptvmrf.edu.in

## VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION

Deemed to be University under section 3 of the UGC Act 1956

A GRADE · Accredited with 'A' Grade by NAAC

**Admission office :** Vinayaka Mission's Research Foundation, Aarupadai Veedu Medical College and Hospital Campus Pondy Cuddalore Main road Kirumampakkam, Puducherry - 607403

nirf NATIONAL INSTITUTIONAL RANKING FRAMEWORK · AISHE ALL INDIA SURVEY ON HIGHER EDUCATION · NABH

admission.pondy@avmc.edu.in

+91 96290 70444

aanmeegamalar.com